|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 14 | குரோதி ௵ மார்கழி - தை | ஜனவரி 2025

ஸ்ரீ காஞ்சி காமகோடி
பீடத்தின் சார்பில்
வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி
கோஶஸ்தானம்



ஸ்ரீ ராம யந்த்ரம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்
## மார்கழி – தை

மலர் 14 ஜனவரி 2025 இதழ் 1

பொருளடக்கம்


| | |
|---|---|
| ப்ரார்த்தனை | 3 |
| ஆசிரியர் பக்கம் | 5 |
| தெய்வத்தின் குரல் | 8 |
| பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| நீதிக் கதைகள் | 10 |
| பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| அனுக்கிரஹ பாஷணம் | 12 |
| பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள் | |
| ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் | 16 |
| ஸ்ரீ பாதஸப்ததி | 17 |
| வேதாந்த ஸம்வத்ஸரம் | 21 |
| வேத ஸூக்தங்கள் | 23 |
| பிறவிக் கடலைத் தாண்டியவர் | 25 |
| தை மாத விசேஷ தினங்கள் | 28 |
| அநுகீதாபர்வம் | 29 |
| முகாம் நிகழ்ச்சிகள் | 33 |
| சுகநாஸ உபதேசம் | 36 |
| ஆச்சார்ய பரம்பரை | 39 |
| சீதா கல்யாணம் | 42 |
| மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரீ | 45 |
| ப்ரபோத சிந்தாமணி | 47 |
| முக ஸாரம் | 48 |






भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஜயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்


# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் – 631502.
தொலைபேசி : 044 – 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।

कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*இந்த பூமிக்குச் சாந்தி, அந்தரிக்ஷத்திற்குச் சாந்தி, மேலுலகிற்குச் சாந்தி, திசைகளுக்கும் இடை திசைகளுக்கும் சாந்தி, அக்னி பகவானுக்குச் சாந்தி, வாயு பகவானுக்குச் சாந்தி, ஆதித்யனுக்குச் சாந்தி, நிலவுக்குச் சாந்தி, நக்ஷத்ரங்களுக்குச் சாந்தி, நீருக்குச் சாந்தி, ஓஷதிகளுக்குச் சாந்தி, வனஸ்பதிகளுக்குச் சாந்தி, பசுக்களுக்குச் சாந்தி, ஆடுகளுக்கும் அஸ்வங்களுக்கும் சாந்தி, புருஷனுக்குச் சாந்தி, ப்ராம்மணனுக்குச் சாந்தி, சாந்திக்கே சாந்தி, அந்த சாந்தி எனக்கு இருக்கட்டும்.*

*அந்த சாந்தியினால் இரு கால் ப்ராணிகளுக்கும் நாற்கால் ப்ராணிகளுக்கும் சாந்தியை செய்கிறேன். அந்த சாந்தி எனக்கு இருக்கட்டும்.*

*[யஜுர் வேதம் — கோஷ சாந்தி]*

*இதுவே என் ப்ரார்த்தனை. ஈஸ்வரனே! அடி அடி என் இதயத்தில் உள்ள தரித்ர வேரை அடி. இன்பத்தையும் துன்பத்தையும் லேசாகத் தாங்க மன உறுதி அளிப்பாய். என் பக்தி ஸேவையில் பலனளிக்க அருள்வாய்.*

*ஏழைகளைப் புறக்கணிக்காமல் இருக்க எனக்கு மனத் திடம் அருள்வாய். அகங்காரம் கொண்ட தலைவர்களை வணங்காமல் இருக்க அருள் புரிவாய். தினசரி சிறு பிள்ளைத்தனமான விஷயங்களிலிருந்து என் மனதை திருப்பி மேன்மைகளைச் செய்ய அருள் புரிவாய்.*

*உன்னிடம் பக்தியுடன் சரணாகதி அடைய எனக்கு மன உறுதி அருள்வாய்.*

*[கீதாஞ்சலி 36]*

## அனைவருக்குமான சூர்ய நமஸ்காரம்

*மாதம் பிறக்கிறது. ஸூர்ய வழிபாடு இதில் முக்யம். ஸ்த்ரீகளும், மற்றவர்களும் எளிதாகச் செய்யக் கூடிய ஸூர்ய நமஸ்காரத்தை அளிக்கிறோம் : —*

*'ஸுக்லாம்பரதரம்..... ஓம் பூ: ப்ராணாயாமம் செய்யவும். பின்பு*

*மமோபாத்த பரமேஸ்வர ப்ரீத்யர்த்தம் ஸ்ரீஸம்க்யா சாயா ஸமேத ஸூர்ய நாராயண ப்ரஸாத ஸித்யர்த்தம் ஸ்ரீ ஸூர்ய நமஸ்காரம் கரிஷ்யே.*

### கஜானனம் கணபதி த்யானம்

*தக்ஷிணாமூர்த்தி த்யானம்*

*குருர் ப்ரஹ்மா குருர் விஷ்ணு: குருர் தேவோ மஹேஸ்வர:*
*குருஸ்ஸாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை குரவே நம: ।।*

| | | |
|---|---|---|
| மித்ராய நம; | ரவயே நம: | ஸூர்யாய நம: |
| பானவே நம; | ககாய நம: | பூஷ்ணே நம: |
| ஹிரண்ய கர்பாய நம: | மரீசயே நம: | ஆதித்யாய நம: |
| ஸவித்ரே நம: | அர்க்காய நம: | |
| பாஸ்கராய நம: | | |

*என்று சொல்லி நமஸ்காரம் செய்யவும்.*

*சாயா ஸம்க்யா ஸமேத ஸ்ரீ ஸூர்ய நாராயண ஸ்வாமினே நம:*
*நம : பூர்வாய கிரயே பச்சிமாத்ரயே நம:*
*ஜ்யோதிர் கணானாம் பதயே தினாதிபதயே நம:*
*ஜயாய ஜயபத்ராய ஹர்யஸ்வாய தே நம:*
*நமோ நம : ஸஹஸ்ராம்ஸோ ஆதித்யாய நமோ நம:*
*ஸௌர மண்டல மத்யஸ்தம் ஸாம்பம் ஸம்ஸார பேஷஜம்*
*நீலக்ரீவம் விரூபாக்ஷம் நமாமி ஸிவமவ்யயம் ।।*
*பானோ பாஸ்கர மார்த்தாண்ட சண்டரஸ்மே திவாகர:*
*ஆயுராரோக்யமைஸ்வர்யம் ஸ்ரீயம் புத்ராம்ச தேஹி மே ।।*

# ஆசிரியர் பக்கம்

*எழுபத்து ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டன நமது நாடு சுதந்திரம் அடைந்து. உண்மையான சுதந்திரம் வரவில்லை, என்று ஒரு கருத்து பல பேரிடம் உள்ளது. உண்மை. பல விஷயங்களில் இன்னும் ப்ரிட்டிஷ் பாரம்பரியத்தையே பின்பற்றுகிறோம். உதாரணம் ஜனவரி 1ஆம் தேதி விடுமுறை கொண்டாட்டம்.*

*அவர்கள் போட்ட ஆர்ய, த்ராவிட இனப் பகை இன்னும் உலராமல் உள்ளது. அவர்கள் சென்ற பின் துலங்கும் என்று எதிர்பார்த்த விஷயங்கள் மங்கிப் போயின. ஏன்? அறிவு ஜீவிகள் என்று சொல்லிக் கொண்ட தவறான அறிவு ஜீவிகள் கைகளில் நமது சரித்ரமும், பாரம்பரிய கலாசாரமும் அவஸ்யமானது. இந்த அறிவு ஜீவிகள் மார்க்ஸிஸ்ட் சித்தாந்தத்தை ப்ராணனாக ஏற்றவர்கள். முக்யமாக ரோமிலா தாபர், இர்பான் ஹபீப், சர்மா போன்றோர்* dysinformation *செய்து நமது பாரதத்தின் தொன்மையான சரித்ரத்தை புரட்டிப் போட்டனர். இத்தனை வருடங்களாக அவர்கள் சொன்னதே வேத வாக்காகியது. உண்மை மறைக்கப்பட்டது.*

*ஒரு சில உதாரணங்களைத் தருகிறோம் :-*

1. *ஆர்யர்களின் கைபர் கணவாய் வழியாக வருகை; சிந்து சமவெளி நாகரிகம்*
2. *மொழியல்லாமல் த்ராவிடம் ஓரினம் என்று கூறப்பட்டது.*
3. *திப்பு சுல்தான் ஆங்கிலேய அரசை ஆட்டிப்படைத்த மாவீரன்.*
4. *ராம ஜன்ம பூமி*

*இவைகளில் உண்மை என்ன என்று பார்ப்போம்.*

1. *ஆரியர்கள் இந்த பாரதீயர்களே. க்ரோமோஸோம் ஆராய்ச்சியின் மூலம் நாட்டில் வசிக்கும் அனைத்து மக்களுக்கும் க்ரோமோஸோம் அடிப்படை ஒன்றேதான். இதில் மத்யதரைக்கடல் மக்களின் கலப்பு இல்லை. எனவே அனைவரும் பாரதீயர்களே. மேலும் சிந்து சமவெளி நாகரிகம் என்பது சரஸ்வதி சிந்து நாகரிகமாகும். மறைந்து போன ஸரஸ்வதி நதியின் ஆராய்ச்சிகளே இதற்கு சான்றாகும். இதன் மூலம் ஆரியர்கள் வருகை மறுக்கப்படுகிறது.*

2. த்ராவிட மொழி சிறப்பான மொழி. ஸம்ஸ்க்ருதத்திற்கு இணையானது. அது இனமாகாது. த்ராவிட ஸம்ப்ரதாயம் ஆர்ய ஸம்ப்ரதாயத்திலிருந்து வேறு பட்டிருந்தாலும் அடிப்படைக் கொள்கைகளில் மாறாதது. சங்க கால பாட்டுகளும் தொல்காப்யமும் சான்றுகள்.

3. ஆங்கிலேயர்களை விரட்டிய திப்புசுல்தான் பல்லாயிரம் இந்துக்களைக் கொன்று குவித்தான். மைசூர் ப்ரதேசத்தில் உள்ள மண்டையம் பகுதியில் தீபாவளி அன்று பல்லாயிர இந்துக்களைக் கொன்றதால் அங்கு இன்றும் தீபாவளி கொண்டாடப்படுவதில்லை.

4. பாபரால் ஏவப்பட்ட மீர் பாகி என்பவன் தலைமையில் அயோத்தியில் ராம ஜன்மபூமி தரை மட்டமாக்கப்பட்டு மசூதி கட்டப்பட்டது. வழக்கு பல வருடங்கள் நடந்து தொல்லியியல் நிபுணர்களால் உண்மை அறியப்பட்டு உச்ச நீதி மன்ற தீர்ப்பால் நீதி நிலை நாட்டப்பட்டு இன்று ராமர் கோயில் மிளிர்கிறது.

இப்படி பல சரித்ர உண்மைகள் மறைக்கப்பட்டு மக்களிடையே பரப்பப்பட்டன.

சரித்ர புத்தகங்களில் அவை எழுதப்பட்டு மாணவர்களின் புத்தி மழுங்கடிக்கப்பட்டது. காலம் காலமாக வந்த இந்த அவலத்தை தற்போதைய மோடி அரசு மாற்றி வருகிறது. தேசீய அளவிலான பாட நூற் கழகம் உண்மை சரித்திரத்தை பள்ளி மாணவர்களுக்கு தங்களது பாட நூல்கள் மூலம் பரப்பி வருகிறது. **'பொய்யும் மெய் போலும்மே மெய் போலும்மே'** என்பது போல் இத்தனை வருடங்கள் பரப்பப்பட்ட பொய்கள் மறைய வருடங்கள் ஆகும். ஆனாலும் செய்ய வேண்டியதே. இதை அமல்படுத்திய மோடி அரசுக்கு பாராட்டுகள்.

மகாகவி பாரதியாருடைய கனவும் இதுதான். அது நனவாக நல்ல முயற்சி செய்யப்பட்டுள்ளது. மகிழ்வோம். இது வளர்ந்து அனைவருக்கும் உண்மை தெரியும் நாளை ஆவலுடன் எதிர்பார்ப்போம்.

உங்கள் கையில் இருக்கும் இந்த இதழில் சில புதிய அம்சங்கள் உள்ளன. வழக்கம் போல் உள்ள அம்சங்களுடன் பாணபட்டர் என்னும் கவியின் சுக நாஸ உபதேசம் இடம் பெறுகிறது. கீதோபதேசத்தை மறந்த அர்ஜுனனுக்கு மீண்டும் ஸ்ரீக்ருஷ்ணர்

*உபதேசித்த 'அனுகீதை' இடம் பெறுகிறது. வேத ஸூக்தங்கள் என்னும் பகுதியில் மிகவும் அபூர்வமான ஸூக்தங்கள் எளிய பொருளுடன் இடம் பெறுகின்றன.*

*ப்ரதீபத்தின் கடந்த இதழ்களிலிருந்து சில கட்டுரைகள் இடம் பெறுகின்றன.*

*வாசகர்கள் படித்து மகிழவும். நிறைய சந்தாதாரர்களைச் சேர்க்கவும் என்று வேண்டிக் கொண்டு இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற் பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

*ஜய ஜய சங்கர ! ஹர ஹர சங்கர!*


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

## VEDA RAKSHANA NIDHI TRUST

**ICICI Bank** T. Nagar, Chennai 17, A/c. No. 602 601205 431

**IFSC Code :** ICIC 0006026

**Bank of Baroda** A/c No. 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank** West Mambalam A/c. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank** West Mambalam A/c No. 0917101041732 IFSC CNRB 0002616

**Indian Bank** Mutt Branch, Kancheepuram **A/c No. 411552514 IFSC IDIB b0005085**

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம். செலுத்துபவர் அவருடைய PAN No. ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம், செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.


வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புபவர்கள் விவரத்தை கீழ்கண்ட இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 044 - 24740549

# தெய்வத்தின் குரல்

**ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்**

## அரசியல் சுதந்திரம் போல் ஆன்மிக சுதந்திரத்திற்காகவும் மக்களே போராட வேண்டும்




ஆயினும் போகிற போக்கைப் பார்க்கும் போது, ‘இதையெல்லாம் புதிய பாரத சுதந்திர அரசாங்கத்தார் செய்வார்களா? அந்த விதத்திலேயே நமது தேசத்தின் அரசியல் நிர்ணயச் சட்டம் வகுக்கப்படுமா? என்ற வினாக்கள் எழத்தான் செய்கின்றன. நவீனப் புரட்சிக் கருத்துக்கள் கொண்ட தேசத் தலைவர்களிடமே முக்கியமாக ஆட்சிப் பொறுப்பு போயிருப்பதால், செக்யூலரிஸம் என்பதற்கு அரசாங்கம் எந்த மதத்தின் சம்பந்தமும் எவ்விதத்திலுமின்றி உலகியல் முன்னேற்றம் என்ற ஒன்றையே கருதி நடப்பது என்று தான் தப்பர்த்தம் செய்து கொள்ளப்பட்டு, அந்த அனர்த்தமே காரியமாகப் போகிறதோ என்று தான் தோன்றுகிறது.

எனவே இப்போது பொது ஜனங்களே தான் குறிப்பாக அவர்களில் ஏனைய நாடுகளின் உலகியல் சார்ந்த கொள்கைக்கு மாறாக பாரதத்திற்கேயான ஆத்மிக மரபில் நாட்டம் கொண்டோராக இன்றைக்கும் மிஞ்சியுள்ள அறிஞர் பெருமக்களேதான் — செயற்களத்தில் முழுமூச்சுடன் குதித்து, சகப் பிரஜைகளையும் தட்டியெழுப்ப வேண்டுமென வற்புறுத்துகிறோம். பாரதம் சுதந்திரம் பெற்றுள்ள இப்போதே அதை உண்மையான ஸ்வதந்திர ஆத்மிக நாடாகப் புத்துயிர் கொள்ளச் செய்யும் அரிய வாய்ப்புக் கிட்டியுள்ளது. ஆனால் புதிய அரசாங்கம் அவ்வாய்ப்பை மனமறிந்து பறிகொடுக்கக்கூடிய நிலையே ஏற்படுமோ எனத் தோன்றுவதால் இந் நாட்டில் இன்றுமுள்ள உண்மையுணர்கிற மேன்மக்களே இவ்வாய்ப்பை அந்தரான்மப்பூர்வமாய் ஏற்று, மற்றோரையும் தட்டியெழுப்பும் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு ஆர்வமுடன் ஈடுபட வேண்டுமென வற்புறுத்துகிறோம். அரசியல் சுதந்திரத்திற்கென ஆர்வத்துடன் போராடத் தொண்டர்படை திரண்டது போலவே, நமது ஆன்மிகச் சுதந்திரத்திற்கும் ஒரு சாத்துவீகப் படை திரள வேண்டுமெனக் கூவியழைக்கிறோம்!

இதற்கு உறுதுணையாக என்றும் உடனிற்க ஈசனையும் கூவியழைத்து வேண்டுகிறோம். நன்மக்கள் யாவரையும் அவ்வாறு வேண்டவும் தூண்டுகிறோம். அரசியல் சுதந்திரப் போராட்டம் போலவே இவ்வான்மியச் சுதந்திரப் போராட்டத்திலும் நமது நாட்டின் சகல மக்களும் ஜாதி, மத பேதமின்றி ஒற்றுமையாக ஒன்றுகூடிச் செயற்புரிதல் வேண்டும். அந்நியராட்சியை அகற்றியது சுயாட்சியில் நாட்டைச் செவ்வனே உருவாக்குவதற்குத்தான். அந்நியராட்சியை அகற்றுவதில் ஒரே சமுதாயமாக ஒற்றுமை காட்டிய பாரத மக்கள் நாட்டை நல்லுருப்படுத்தும் பெரும் பொறுப்பினைப் பெற்றுள்ள இன்று தமக்குள் பேதங்கள் பாராட்டிப் பிரிந்து பிரிந்து நிற்கின் சுதந்திரம் பெற்றதன் பயனையே இழந்துவிட நேரிடும்.

## சிறுபான்மைச் சமூகத்தினரையும் தேசப் பற்றுக் கொள்ளச் செய்வது பெரும்பான்மையினரின் அன்புக் கடமையாகும்.

இவ்வறிக்கையில் நாம் சில சமூகத்தினர் கைக்கொண்ட முறையின் தவறுகளை எடுத்துக் காட்ட வேண்டியிருந்தது எதிர்காலத்திற்குப் படிப்பினை காட்டி எச்சரிக்கும் பொருட்டுத்தானேயன்றி, இன்று அச்சமூகங்களின் வழிவந்தோரிடம் ஹிந்து சமூகத்தினர் மன வேற்றுமை பாராட்டிப் பூசலிடுவதற்குத் தூண்டு முகமாகவல்ல. தங்களைப் போலவே இந்நாட்டில் வாழும் ஏனைய சமூகத்தினரும் சம உரிமை பெற்ற சகப் பிரஜைகளே என்ற உணர்ச்சியை நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்தினரான ஹிந்துக்களே முன்நின்று நடத்திக் காட்ட வேண்டுமென்பதே நமது விருப்பம். பிற மதத்தினர்களிடமும் அன்போடு பழகி இந்நாட்டிலுள்ள எல்லா மதப் பிரஜைகளும் ஒரே போல பாரதீயர் தாம் என்று அவர்கள் உணருமாறு செய்வதை ஹிந்துக்கள் ஒரு கடமையாக மதித்துப் பொறுப்புணர்ச்சியுடன் ஆற்ற வேண்டுமென்பது நமது விருப்பம். அவ்விதம் செய்தால் தான் சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்தோருக்கும் பாரதமே தமது தாயகம் என்ற சுதேசாபிமானம் உறுதியாக உருவாகி நிலைக்கும். சுதந்திரப் போராட்டத்தின் கடைசிக் கட்டத்தில் ஒரு சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தோரில் பலருக்கு இதற்கு மாறான உணர்ச்சி அச் சமூகத் தலைவர்களாலேயே தூண்டப்பட்டு அதனால் நிகழ்ந்த உற்பாதங்களை நாம் மறவாதிருப்பின் இவ்வாறு சிறுபான்மையினருக்குச் சுதேசாபிமானம் பாரதத்திடம் உறுதிப்படாவிடில் எதிர்காலத்தில் எத்துணை அபாயம் ஏற்படக்கூடுமென்று காண்போம். மனிதகுலம் முழுவதற்கும் பொதுவான ஒரே ஈசனின் குடிமக்களாகவும் குழந்தைகளாகவும் நாட்டின் சகலப் பிரிவினரும் ஒன்றுகூடி உழைத்தால்தான் இந்நாட்டை உலகுக்கே உதாரணமானதோர் ஆன்மிய மையம் கொண்ட அமைதி நாடாக உருவாக்கவியலும்.

(தொடரும்)

# நீதிக் கதைகள்

### ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்



## பொங்கல் பண்டிகை

ஒவ்வொரு ஆங்கில ஆண்டும் ஜனவரி மாதம் முதல் தொடங்கும். நம்முடைய ஆண்டு சித்திரை மாதத்திலிருந்து தொடங்குவதை நாம் அறிவோம். ஆனால் நம்முடைய மதத்தின் அடிப்படையில் மார்கழி மாதம் மிகப் புனிதமாகக் கருதப்படுகிறது.

தை, மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய ஆறு மாதங்கள் தேவதைகளின் பகற்காலம். ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய ஆறு மாத காலம் தேவதைகளுக்கு இரவு காலம். மார்கழி மாதமானது தேவர்களின் விடியற்காலை வேளை.

நம் எல்லோருக்குமே விடியற்காலை வேளையில் எழுந்திருப்பது, புத்தகங்களைப் படிப்பது, நல்லவற்றைச் சிந்திப்பது ஆகியவை நல்லது. விடியற்காலையில் செய்யக்கூடிய பணிகள் எல்லாம் நீண்ட காலம் இருக்கக் கூடியவை. முந்தைய இரவில் பல காரியங்களைச் செய்து, மனம் குழம்பியிருக்கலாம். ஆனால் காலையில் எழுந்திருக்கும்போது மனம் தெளிவாக இருக்கும் எழுந்து சிறிது நேரத்திற்குப் பிறகு குழப்பம் ஏற்படலாம். ஆனால் தூக்கத்திலிருந்து எழுந்திருக்கும் நேரத்தில் மனம் தெளிவாக இருக்கும். ஆகவே அந்த விடியற்காலை வேளையில் மனம் தெளிவாக இருக்கும் போது நல்லதை நினைத்தால் அது நிலைத்து நிற்கும். பள்ளிப் பாடங்களைப் படித்தால் நிற்கும்.

விடியற்காலை வேளையில்தான் பட்சிகளெல்லாம் உறங்கிவிட்டுத் தன் பணிகளைச் செய்யக் கூண்டிலிருந்து வெளியே கிளம்புகின்றன. உயிருள்ள அனேக பிராணி வர்க்கங்கள் தம் பணிகளைச் செய்யவும், இரை தேடவும் முயன்று விடியும் பொழுதை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டு உள்ளன. சூரியனும் தன்

பணியைச் செய்ய வெளிக் கிளம்புகிறான். ஆகவே விடியற்காலை வேளையில் இருள் அகலுகிறது, பிரகாசம் ஏற்படுகிறது. சோம்பல் அகலுகிறது. சுறுசுறுப்பு ஏற்படுகிறது. செயல்படுவதற்குச் சிந்தனை தூண்டிவிடப்படுகிறது. இத்தனையும் மனித வாழ்க்கையில் நாம் பலன் அடைவதற்காகத்தான்.

எந்தவொரு கலாசாரத்துக்கும் மூலமானது ஹிந்து கலாசாரம். மார்கழி மாதம் புனிதமான மாதமாக, இறைவனுக்குச் சம்பந்தப்பட்ட மாதமாக, இறைவனால் கூறப்பட்டிருக்கிறது. மார்கழி மாதத்திலே கோபியர்கள் கிருஷ்ணனைத் துதித்ததாக வரலாறு கூறுகிறது. இப்போதும் மார்கழி மாதத்தில் எல்லாக் கோயில்களிலும், வீடுகளிலும் சுத்தம் செய்து, கோலமிட்டு, பூஜை, பஜனை முதலியன செய்யப்பட்டு வருகின்றன.

உலக வாழ்க்கைக்குத் தேவையான எந்தவொரு பணியையும் இந்த மார்கழி மாதத்தில் தொடங்க மாட்டார்கள். இறைவனுக்காகச் செய்யப்படும் பணிகளை மாத்திரமே மார்கழி மாதத்தில் விசேஷமாகக் கொண்டாடுவார்கள். ஹிந்துக்களின் முக்கியமான வழிபாட்டுத் தெய்வங்கள் சிவபெருமானும், விஷ்ணுவும் ஆவர். இவ்விருவரின் திருவிழாக்கள் இந்த மாதத்தில்தான் வருகின்றன. வைகுண்ட ஏகாதசியன்று பெருமாளுக்கும், திருவாதிரையன்று சிவவடிவமான நடராஜப் பெருமானுக்கும் விழாக்கள் நடைபெறுகின்றன. இந்தப் புனிதமான மாதத்தில்தான் மற்ற மதத்தினரும் வருடப்பிறப்பு விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

ஆகவே, இந்தப் புனிதமான மாதத்திலே புனிதமான மனிதப் பிறவி எடுத்த நாம் அனைவரும் புனித எண்ணங்களும் புனிதச் செயல்களும் நம்மிடையே வளர வேண்டும் என்று புனிதமான ஆண்டவனைப் புனிதமான மனதுடன் பிரார்த்தனை செய்வோமாக.

இந்த மார்கழி முடிவில் தான் பொங்கல் பண்டிகை வருகிறது. ஒவ்வொரு நாளும் வீட்டில் பால் காய்ச்சும் போது பொங்கும். ஆனால் அது பண்டிகை ஆகாது. ஆனால் பொங்கல் பண்டிகையன்று 'பால் பொங்கிற்றா?' என்று கேட்பது மரபு.

பால் இனிப்பான வெல்லத்துடன் சேர்ந்து பொங்கி, சர்க்கரைப் பொங்கலாக ஆவதுபோல, நம்முடைய வாழ்க்கையிலும் தூய்மையான எண்ணங்களுடன் இனிப்பான சிந்தனைகள் வளர்ந்து பொங்கி ஆனந்தமான வாழ்க்கை அடைய முயற்சி செய்வோம்.

ஜெய ஜெய சங்கர... ஹர ஹர சங்கர...

(தொடரும்)

# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்


## அனுக்ரஹ பாஷணம் — 12.12.2024

### இடம் : திருப்பதி முகாம்

வந்தே குரு பரம்பராம்

இன்று அயோத்தியாவில் முப்பது நாட்களாக நல்ல அனுஷ்டானம் நடைபெற்று வருகிறது. கரக் சேவா புரத்தில் இந்த நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்த சேவை செய்பவர்கள் கூட , ராமர் பிறந்த புண்ணியச் க்ஷேத்ரத்தில் :-

**ஜனனி ஜன்ம பூமிஸ்ச ஸ்வர்காதபி கரீயசி**



- என்று இலங்கையில் கேட்கிறார், யுத்த சமயத்தில், லக்ஷ்மணனிடம் இராமர் சொல்கிறார் -

**அபி ச்வர்ணமாயி லங்கா ந மே ரோசதி லக்ஷ்மண ।**
**ஜனனீ ஜன்ம பூமிஸ்ச ஸ்வர்காதபி கரீயஸி ॥**

தங்க மயமான லங்கா, அது குபேர பட்டணம் என்று பெயர். அந்த மாதிரி லங்கா கூட என் மனதிற்கு இஷ்டமில்லை. அயோத்தியாவே எனக்கு மிக பிடித்தமானது. ஜனனி, ஜன்ம பூமி - தாயும் தாய் நாடும் எனக்கு முக்கியம் என்று இராமர் கூறினார். அம்மாதிரியான பிறந்த நாட்டில், ராமருக்கு வெவ்வேறு இடத்தில் கோவில்கள் இருந்தாலும் அவர் பிறந்த

புனிதமான பூமியில், அவருக்காக கோவில் நிர்மாணம் செய்ய வேண்டும் என்று காரியகர்த்தர்கள் சிந்திக்கவும், அதை திட்டமிடவும், பிரார்த்தனை செய்யவும், மக்களிடமும், நீதித் துறைகளிடமும் அனுமதி பெற்று, கோவில் எப்படி கட்ட வேண்டும் என்று சிந்தித்த இடம் கர்சேவக் புரம். இம்மாதிரியான கர்சேவக் புரத்தில், விசாலமான இடத்தில், அனுஷ்டானம் செய்கிறார்கள். அச்சமயம் ஜனவரி 22 ம் தேதி த்வாதசி சதய நக்ஷத்திரம் அன்று அபிஜித் முஹூர்த்தம் சமயம் பால ராம விக்ரஹ பிரதிஷ்டை நடைபெற்றது. இதன் மத்தியில் பல வசதிகள், ஹோமங்கள், யாகங்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த விசாலமான மண்டபத்தில், ரிக் வித்துக்கள், தென்னிந்தியாவில் இருந்து வந்து, பங்கேற்றுக் கொண்டார்கள். இந்த பவ்யமான, விசாலமான, புண்ணியமான நமக்கு பலம் தரும் காரியமாக நாம் நினைக்க வேண்டும்.

இந்தக் காரியக்கிரமத்தில் நீங்கள் பார்க்கும் யந்திரம், தங்கத்தால் செய்யப்பட்டது. இந்த யந்திரம் சிறப்பான யந்திரம். கீழே காணப்படுவது மேரு, கிரந்த அக்ஷரத்தில் எழுதிய யந்திரம். இந்த யந்திரம் காஞ்சியில் உள்ள யந்திரம். அந்த யந்திரத்தை பஞ்சலோகத்தில் தயார் செய்து , தங்கத்தில் செய்து, வட நாட்டில் இருப்பவருக்கும் புரிய வேண்டும் என்று தேவநாகரியில் தயார் செய்யப்பட்டது. இந்த யந்திரத்தை எடுத்துக் கொண்டு திருப்பதியிலிருந்து நவமி அன்று எடுத்துக் கொண்டு (மடத்து சிப்பந்திகள்) கிளம்பினார்கள். மடத்தின் சிப்பந்திகள் ஏகாதசி அன்று இரவு முழுவதும் பயணம் செய்து அயோத்தியா சென்றடைந்தார்கள். பகவத் கீதா தினம் அன்று, கீதா ஜெயந்தியன்று சமர்ப்பணம். இன்று பூர்ணாஹுதி செய்யப்பட்டது. இந்த யந்திரம் நேபாள் வரை சென்று வந்தது. நேபாளில் ஜனக்புரி என்ற இடம், ஜனக மகாராஜர் இடம். சீதா அம்மையாரின் க்ஷேத்திரம். அங்கு இந்த யந்திரம் சென்று வந்தது - மகா மந்திரா, மகா தந்திரா, மகா யந்திரா - என்கிறார்கள்.

அந்த யந்திரத்தில் என்ன சொல்கிறார்கள்.? எந்த மாதிரியான யந்திரம்? அதை நாம் பரிசீலனம் செய்த சமயம், அந்த யந்திரம் நிர்மாணம் செய்ததே ஒரு அபூர்வமானது. அந்த சிற்பக் கலை ஒரு அபூர்வமாக செய்தார்கள். தொழில் நுட்ப முறையில் செய்தார்கள். அந்த ராம யந்திரத்தில் **ஆ பிரம்ம கல்ப பரியந்தம் - ஸ்ருஷ்டி கால நிர்மாணம்** -வைகுண்டத்தில் மகா விஷ்ணு எப்படி உள்ளாரோ, அவரின் அவதாரமான ராம சந்திர மூர்த்தி அயோத்தியாவில் உள்ளார். **பூர்ண பாவேன** - பூரணமாக அங்கே உள்ளார். **சாங்கஹா சபரி வாரஹா** - ஏகாந்தமாக இல்லாமல், **சீதா, லக்ஷ்மண, பரத, சத்ருகன, ஆஞ்சநேய - சமேத ராமச்சந்திர பரப்ரம்மனே நம:** என்று நாம் பூஜிக்கிறோம்.

எப்பொழுதும் இங்கே நிவாசம் (சதா வசன்) செய்து என்ன செய்கிறார் ? **துஷ்ட நிக்ரஹம் சிஷ்ட பரிபாலனம்** - ஆஞ்சநேய சுவாமி இராம பட்டாபிஷேக சமயம், சீதா தேவிக்கு கூறுகிறார் :

யாருக்கு இந்த மாதிரி குணங்கள் உள்ளதோ, அவருக்கு இந்த மாலையை தரலாம். சீதா தேவி ஒரு மாலையைத் தரலாம் என்று யோசனையில் இருந்தாள், இந்த குணங்கள் யாருக்கு உள்ளது என்று நினைக்கிறாயோ, அவருக்கு இந்த மாலையைத் தரவும். அந்த மாலையை ஆஞ்சநேய சுவாமிக்கு , சீதா தேவி தந்தாள். குணம் முன்னோடியாக வாழ்வது, இந்த தேசத்தின் சிறப்பானது ஒன்று. தனம் அவசியம். அதற்கெல்லாம் முக்கியம் குணம், நல்ல ஸ்வபாவம், நல்ல ஆத்ம குணங்கள் முக்கியம். அதுவே நமக்கு கிடைத்த சந்தேசம், அருளுரை.

வீரம், பராக்ரமம், சத்தியம், சேவா எண்ணம் போன்ற அநேக குணங்கள் யாருக்கு உள்ளதோ, அவருக்குத் தரவும் என்றார் ஆஞ்சநேயர். ஆஞ்சநேயர் மூலமாக, துஷ்ட நிக்ரஹம், சிஷ்ட பரிபாலனம் செய்து கொண்டு, நீங்கள் எப்பொழுதும் இங்கே இருக்க வேண்டும் என்று இராமரை ஆஞ்சநேயர் பிரார்த்தனை செய்து கொள்கிறார். இந்த யந்திரத்தில், இம்மாதிரியான வாக்கியங்கள் உள்ளன. பீஜாக்ஷரம் உள்ளது. இராமரின் மூல மந்திரம் உள்ளது. இராமர் நமக்கு ஞானம் அருள வேண்டும். அநேக பீஜாக்ஷரம் உள்ளது. நரசிம்ம மந்திரம் உள்ளது. வாசுதேவ மந்திரம் உள்ளது. அஷ்டாக்ஷரி மந்திரம் உள்ளது. மந்திர சாஸ்திரப்படி இதில் அனைத்தும் எழுந்தருளிச் செய்துள்ளார்கள். இந்த சிறந்த யந்திரம் இங்கு வருதல் ரொம்ப விசேஷம்.

**யந்திர ராஜாய வித்மஹே மஹா யந்திராய தீமஹி**
**தன்னோ யந்திரப் ப்ரசோதயாத்**

**ஓம் தாசரதாய வித்மஹே சீதா வல்லபாய தீமஹி**
**தந்நோ ராமப் ப்ரசோதயாத்**

**மந்திர ராஜாய வித்மஹே மஹா மந்திராய தீமஹி**
**தன்னோ மந்திரப் ப்ரசோதயாத்**

யந்திரத்தில் அவ்வாறு இராமரின் மகிமையைக் கூறியுள்ளார்கள். இராமரின் ஜாதகத்தை ஸ்லோக வடிவில் இந்த யந்திரத்தில் வடித்துள்ளார்கள். சங்கராச்சாரியார் இந்த யந்திரத்தை பிரசாரம் செய்தார்கள். அநேக க்ஷேத்திரத்தில் அநேக யந்திரப் பிரதிஷ்டை செய்தார். இப்பொழுது கூட காஞ்சி மடத்தின் சார்பாக, தேவாலயத்தில் யந்திரப்

பிரதிஷ்டைக்கு யாராவது அணுகினால், யந்திரம் வடித்து, எழுதி தருகிறார்கள். யந்திரத்தில் தன ஆகர்ஷன யந்திரம், ஜனா ஆகர்ஷன யந்திரம்- திருப்பதி ஷேத்திரத்தில் பிரதிஷ்டை செய்தார்கள். காமாக்ஷி அம்மன் கோவிலில் ஸ்ரீ சக்கர யந்திரம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இப்பொழுதும் காமாக்ஷி கோவிலில் இதற்கு பூஜை செய்யப்பட்டு வருகிறது. உத்தராயணம் மகா சங்கராந்தி முதல் மகா சிவராத்திரி வரை மகா கும்ப மேளா நடைபெற உள்ளது. அங்கு காஞ்சி பீடம் சார்பாக, திருப்பதி தேவஸ்தானம் சார்பாக தார்மீக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்துள்ளார்கள். வேத பாராயணம், ஹோமங்கள் செய்கிறார்கள். அயோத்தியா என்பது ஒரு சக்தி பீடம். பஞ்ச பூத சக்தி பீடங்களில், ப்ருத்வி சக்தி பீடம் அயோத்தியா. மக்கள் கும்ப மேளா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, கங்கா ஸ்தோத்திரம் பாராயணம் செய்து, இராமரின் அனுக்ரகத்திற்கு பாத்திரமாக பிரார்த்திக்கிறோம்.

## காஞ்சி மகா சுவாமிகளின் பொன்மொழிகள்

- சாஸ்திரங்களைத் தெளிவாக அறிந்து அதன்படி மக்களை வழிநடத்தி அதை அனுசரிப்பவர்தான் ஆசார்யார்.
- சாஸ்திரம் மட்டும் தெரிந்து கொண்டிருந்தால் அவர் வித்வான் தான்.
- சாஸ்திரம் மட்டும் தெரிந்தால் அவர் வித்வான். சாஸ்திரம் அனுசரிப்பவர் ஞானி. சாஸ்திரம் உபதேசம் செய்பவர் பிரசாரகர்.
- முதலில் அழகாகத் தோன்றுவது தான் அப்புறம் உபத்திரமாக போகிறது.
- அவரவர்கள் இருக்கிற இடத்தில் இருந்தால் தான் சௌக்கியம்.
- பரமாத்மாவிடம் நம்மையறியாமல் சித்தத்தை சேர்ப்பது தான் பக்தி.
- உண்மை என்பது அறிவுதான் என்றால் அறிகிற அந்த சக்தியே உண்மை — அதுவே சத்தியம்.
- ஆசைகளை அடக்கி, மாயையை உடைத்தெறி.

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

# सदासिव ब्रह्मेन्द्र कीतर्ना:

## स्थिरता न हि न हि रे

स्थिरता न हि न हि रे  मानस  स्थिरता न हि न हि रे

तापत्रयासागरमग्नानाम्  दर्पहम्कारविलग्नानाम्  (स्थिरता)

विषयपाषवेष्तिचित्तानाम्  विपरीतग्यानविमत्तानाम्  (स्थिरता)

फरमहम्सयोगविरुद्दानाम्  बहुचन्चल्तरसुखसिद्दानाम्  (स्थिरता)

## ஸ்திரதா ந ஹி ந ஹி ரே !

ஸ்திரதா ந ஹி ந ஹி ரே மானஸ ஸ்திர்டஹா ந ஹி ந ஹி ரே!

தாபத்ரயஸாகரமக்னானாம் தர்பாஹம்காரவிலக்னானாம் (ஸ்திரதா)

விஷய பாசவேஸ்டிதசித்தானாம் வ்பரீதக்யானவிமத்தானாம் (ஸ்திரதா)

பரம ஹம்ஸயோகவிருத்தானாம் பஹுசன்சலதரஸுக ஸித்தானாம் (ஸ்திரதா)

பொருள் : நிலையானது எதுவுமில்லை, மனமே நிலையானது எதுவுமேயில்லை. மூவகை தாபஸமுத்ரத்தில் மூழ்கியவர்களுக்கும் அஹம்பாவம் இவற்றில் பற்று உடையவர்களுக்கும் நிலையானது இல்லை. இந்த்ரியஸுகங்களில் கட்டுண்ட மனமுடையவர்களுக்கும் விபரீதமான ஞானத்தால் மதம் கொண்டவர்களுக்கும் நிலையானது இல்லை.

பரமஹம்ஸர்களின் யோக நிலையோடு மாறுபட்டவர்களுக்கும் மிகவும் நிலையற்றதான ஸுகங்களையே பெற்றவர்களுக்கும் நிலையானது இல்லை.

# ஸ்ரீ பாதஸப்ததி-1

## ஸ்ரீ மேல்பத்தூர் நாராயண பட்டத்ரி இயற்றியது

பி. ஆர். கண்ணன்

**முன்னுரை**

அம்பாளின் ஸ்ரீபாதங்களை துதிக்கும் 70 அரிய ஸ்லோகங்களைக் கொண்ட இக்க்ரந்தம், ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீநாராயணீயம் இயற்றிய ஸ்ரீமேல்பத்தூர் நாராயண பட்டத்ரி அவர்களால் ஆக்கப்பட்டது. அவர் பாதத்தில் ரோகத்தினால் ஸ்ரமப்பட்டு, ஸ்ரீகுருவாயூரப்பன் ஸந்நிதியில் 1000க்கும் மேற்பட்ட ஸ்லோகங்களைக் கொண்ட ஸ்ரீநாராயணீயத்தைப் பாடி, பகவான் ஸ்ரீக்ருஷ்ணன் அவற்றை ஆமோதித்து, தலையசைத்து, தரிஸனமும் தந்து, கடைசியில் தன்னுடைய ரோக நிவ்ருத்தி ஆகி, பகவானின் பூர்ண அனுக்ரகத்திற்குப் பாத்ரரான வரலாறு மிகப் ப்ரஸித்தம். கடைசியில் பட்டத்ரி தன்னை நீண்ட காலமாக துன்புறுத்திய கால் நோய் குணமடைந்ததைக் கண்டார். இருப்பினும் அவர் மன அமைதி மற்றும் பேரின்பத்திற்காக ஏங்கினார். அது இன்னும் அவருக்குக் கிட்டவில்லை.

குருவாயூரப்பன் அவரது கனவில் தோன்றி முக்திஸ்தலம்* (குருவாயூருக்கு அருகில் உள்ள) என்ற இடத்திற்கு சென்று துர்க்கை தேவியை வழிபடும்படி வழிகாட்டினார் என்பது பரம்பரையாக நாம் செவிமடுக்கும் விஷயமாகும். பட்டத்ரி, அவ்வாறே முக்திஸ்தலத்தில் தேவியை தரிசனம் செய்தவுடன், **ஸ்ரீபாத ஸப்ததி** என்ற தலைப்பில், தேவியின் ஸ்ரீபாதங்களைப் புகழ்ந்து மனதை உருக்கும் 70 ஸ்லோகங்களைப் பாடி உள்ளம் நெகிழ்ந்தார். அவர் தேவியின் அருள் பெற்றதாகவும், தனது இறுதி நாட்களை அங்கேயே தேவியின் பாதத்தில் கழித்ததாகவும், முக்தி அடைந்ததாகவும் கூறப்படுகிறது.

ஸ்ரீபாத ஸப்ததியில், ஸ்ரீ நாராயண பட்டத்ரி வாசகரை ஸம்ஸ்கிருத கவிதை மற்றும் பக்தியின் உச்சத்திற்கு அழைத்துச் செல்கிறார். தேவியின் அருளைப் பற்றிய அவரது விளக்கம் மிகவும் நேர்த்தியானது மற்றும் உயர்ந்தது. ஸம்ஸ்கிருத இலக்கணத்தின் பல்துறை அறிஞரான அவர், இலக்கண விலாஸங்கள், மற்றும் அலங்காரத்தின் எந்த வடிவத்தையும் தவறவிடவில்லை. புனித பாதங்களின் ஒப்பற்ற அழகு, இமயமலையில்

பார்வதியின் தெய்வீக குழந்தை விளையாட்டு, சிவனுடனான அவரது திருமணம், அவர்களின் காதல் மற்றும் போலி கோபம், மகிஷாசுரன் மற்றும் சும்பனின் அழிவு, சிவன், பிரம்மா, விஷ்ணு, இந்திரன் மற்றும் தேவியின் பாதத்தில் மற்ற திக்பாலகர்களின் வழிபாடு, மற்றும், அனைத்திற்கும் மேலாக, தேவி தனது பக்தர்களுக்கு பெருங்கருணை காட்டுதல் ஆகியவற்றை கவி குறிப்பிடுகிறார்.

நமது ஸனாதன தர்மத்தில் தெய்வங்கள் மற்றும் குருக்களின் பாத பூஜை பாரம்பரியம் தொன்று தொட்டு வலுவாக இருந்து வருகிறது. ஸ்ரீபாதங்கள் எப்போதும் கருணை, இரக்கம், கொடை ஆகியவற்றிற்குப் பெயர் பெற்றவை என்றும், பக்தரின் தகுதிகளை தேவியைப் போல எடைபோடாமல் ஸ்ரீபாதங்கள் அனுக்ரகிப்பார்கள் என்றும் கொண்டாடப்படுகிறது.

ஸ்லோகங்கள் தமிழில் விளக்கத்துடன் இங்கே வழங்கப்படுகின்றன.

முக்திஸ்தலம், தற்போது முக்கோளக்கா என்று வழங்கப்படுகிறது. குருவாயூருக்கும் கோழிக்கோடுக்கும் மத்தியில் உள்ளது. குருவாயூரிலிருந்து 30 கி.மீ. தொலைவிலுள்ள சங்கராபுரம் சென்று, அங்கிருந்து குறுகிய பாதையில் பயணித்து இந்த ஸ்தலத்தை அடையலாம். துர்க்கை (ஸ்வயம்பூ ), ஆதிஸங்கரர் ஸ்தாபித்துள்ள சிவன், மற்றும் ஸ்ரீநாராயண பட்டத்ரியின் உருவம் ஆகியோரை தரிஸனம் செய்யலாம்.

**தியான ஸ்லோகம்:**

**த3க்ஷாத:4கரபல்லவேலஸத3ஸிம் த3க்ஷோர்த்4வகே3 ஶூலினீம்**
**வாமோர்த்4வேப2லகோஜ்ஜ்வலாம் கடிதடந்யஸ்தாந்யஹஸ்தாம்பு3ஜாம் ।**
**ஶூலாக்3யூராஹதகாஸராஸுரஸ்ரோநிஷ்டா2ம் ப்ரஹ்ரு’ஷ்டாம்**
**ஸுரைர்-**
**ஜுஷ்டாமிஷ்டப2லப்ரதா3ம் ப4க3வதீம் முக்திஸ்த2லஸ்தா2ம் ப4ஜே ॥**

‘முக்தி ஸ்தலத்தில் வசிக்கும் பகவதியை வணங்குகிறேன்; அவளது கீழ் வலது கையில் பிரகாசிக்கும் வாளை உடையவள், இது ஒரு மென்மையான கொடியைப் போன்றது; மேல் வலது கையில் திரிசூலம்; மேல் இடது கையில் ஒரு ஒளிமிக்க கவசம்; மற்றொரு இடது கை, தாமரை போன்றது, இடுப்பில் அமைந்துள்ளது; மகிஷாசுரனின் உடைந்த தலையில் திரிசூலத்தின் நுனியை வைத்தவள்; தேவர்களால் வழிபடப்படுவள்; விரும்பிய வரங்களை அளிப்பவள்.

ஸ்ரீ நாராயண பட்டத்ரி இந்த ஆரம்ப த்யான ஸ்லோகத்தில் முக்திஸ்தலத்தில் உள்ள பகவதி துர்க்கையின் உருவத்தின் துல்யமான விளக்கத்தை வாசகர் தனது மனத்தில் நிலைநிறுத்துமாறு முன்வைக்கிறார்.

இங்கே அவர் இரண்டு முக்கியமான விஷயங்களையும் பகிர்கிறார்: ஒன்று, அவள் தேவர்களால் வணங்கப்படுகிறாள். மகிஷாசுரன் என்ற அரக்கனின் கைகளில் தோல்வியடைந்த, சக்தி வாய்ந்த தேவர்கள், தேவியை ஸந்தோஷப்படுத்தி, தங்கள் கொடிய எதிரியை அழிக்கும்படி வேண்டினார்கள். தேவி அவர்களின் விருப்பத்தை நிறைவேற்ற, தேவர்கள் அவள் காலில் விழுந்து அவளது அருளைப் போற்றினர். இரண்டாவது விஷயம் என்னவென்றால், தன்னிடம் சரணடையும் எந்தவொரு பக்தனின் விருப்பத்தையும் நிறைவேற்ற தேவி எப்போதும் ஆர்வமாக இருக்கிறாள். அவளுடைய வரம்பற்ற வரத்தைப் பெறுபவர்கள் தேவர்கள் மட்டுமல்ல, உதவிக்காக அவளிடம் மன்றாடும் எவரும்.

**யத்ஸம்வாஹநலோபி$^{4}$ந: ஸஸிகலாசூட$^{3}$ஸ்யஹஸ்தாம்பு$^{3}$ஜ-**
**ஸ்பர்ஸேநாபி ச லோஹிதாயதி முஹுஸ்த்வத்பாத$^{3}$பங்கேருஹம் ।**
**தேநைவோத்$^{3}$தர காஸராஸுரஸிரஸ்ஸ்ரு'ங்கா$^{3}$க்யூரஸஞ்சூர்ணந-**
**ப்ராசண்ட்$^{3}$யம் தத$^{3}$நுஷ்டி$^{2}$தம் கில கத$^{2}$ம் முக்திஸ்த$^{4}$லஸ்தே$^{2}$! ஸிவே ! ॥**

1. 'முக்திஸ்தலத்தில் வசிக்கும் மங்களாம்பிகே! உங்கள் தாமரைப் பாதத்தைத் தம் தாமரைக் கையால் தாங்க பேராவல் கொண்ட, சந்திரகலையால் அலங்கரிக்கப்பட்ட சிரஸை உடைய, ஸ்ரீ பரமேஸ்வரர், உங்கள் ஸ்ரீபாதத்தை ஸ்பரிசிக்கிறார், அது உடனடியாக சிவப்பாக மாறுகிறது. அதே (மென்மையான) ஸ்ரீபாதத்தினால், மலையை விடப் பெரிய உடலைக் கொண்ட மகிஷாசுரனின் தலையைக் கடுமையாகத் தூளாக்கினாய். அது எப்படி சாத்தியமானது'

கவிஞர் ஸ்ரீ நாராயண பட்டத்ரி தனது கடைசி நாட்களில் பிரார்த்தனை செய்து முக்தி அடைந்த முக்திஸ்தலம் (கேரளத்திலுள்ளது; தற்போது முக்கோளக்கா என்று அழைக்கப்படுகிறது) என்ற இடத்தில் ப்ரகாசிக்கும் துர்கா தேவியைப் பற்றிய குறிப்பு. முக்திஸ்தலம் முக்திக்காக பழுத்துள்ள பெரிய யோகிகளின் தூய்மையான இதயங்களையும் குறிக்கிறது. மேலும் இது அவித்யை (அல்லது மாயை) நீங்கப் பெற்று வித்யையை அடைவதில்தான் முக்தி விளைகிறது என்ற உண்மையையும் குறிக்கிறது. தேவி வித்யையின் ஸ்வரூபம். எனவே முக்தியின் ஒரே ஆதாரம்.

தேவியின் தாமரை பாதங்களின் மென்மை மற்றும் கடினத்தன்மை ஆகிய எதிர் குணங்களை ஒரே நேரத்தில் வெளிப்படுத்துவது கவிஞராகிய பக்தரால் அழகாக உணர்த்தப்படுகிறது. இது ஒரே நேரத்தில் நல்லோரைக் காக்கும் தேவியின் அருளையும், மற்றும் தீமையை அழிக்கும் அவளுடைய உக்கிரத்தையும் குறிக்கிறது.

துர்கா ஸப்தசதியில், மகிஷாசுரனைக் கொன்ற பிறகு, தேவர்கள் தேவியிடம் பிரார்த்தனை செய்வதில், இதேபோன்ற கருத்தினைக் காண்கிறோம்:

**''யா ஸ்ரீ: ஸ்வயம் ஸுக்ருதினாம் பவனேஷ்வலக்ஷ்மீ:**
**பாபாத்மனாம்''**

''நல்லவர்களின் இல்லங்களில் லட்சுமியாகத் தானே வீற்றிருக்கும் தேவி, தீயவர்களின் வீட்டில் 'அலக்ஷ்மி' ஆகிறாள்.

(தொடரும்)

ஜய ஜய சங்கர　　　　உ　　　　ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

சீடர்களின் கவனத்திற்கு

**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்**
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச் சிறந்ததாகும்.

**''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,**
**ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்**
**ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய**
**ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்**

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் ஜிஹ்மாதிதோஷவிதூராய வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ஓம் ஸத்யவ்ரத: ஸத்யநிஷ்ட: குருஸேவாபராயண: ।**

**குருக்ருபாபாத்ரபூத: பவேத்வேதாந்தபாஸ்கராய நம : ।**

சத்தியவிரதனும், சத்தியநிஷ்டனும், குருசேவாதத்பரனும் ஆகிய சாதகன் சத்குருவுடைய கிருபைக்குப் பாத்திரம் ஆகிறான்.

## 34. சத்தியவிரதத்தின் மகிமை!

**தம் ஹோவாச நைதத் அப்ராஹ்மணோ விவக்தும் அர்ஹதி, ஸமிதம் ஸோம்ய ஆஹர, உப த்வா நேஷ்யே, ந ஸத்யாதகா:**

**சாந்தோக்யோபநிஷத் 4-4-5**

*அந்த சத்தியகாமஜாபாலனிடம், ஹாரித்ருமத கௌதமன் என்கிற ஆசார்யன் இவ்வண்ணம் ''பிராமணன் அல்லாதவன் இப்படிச் சொல்ல மாட்டான். குழந்தாய், சமித்துக்களைக் கொண்டு வா. உனக்கு நான் உபநயனம் செய்கிறேன். ஏனென்றால் நீ சத்தியத்தைக் கைவிடாதவன்.*

பிராமணன் ஆனவன் கனவிலும் பொய் சொல்ல மாட்டான். பிராமணன் எப்பொழுதும் சத்தியத்தையே கூறுவான். இது பிராமண்யத்தினுடைய லக்ஷணம். சத்திய நிஷ்டையினால் ஆத்மஞானம் உண்டாகிறது.

ஹாரித்ருமத கௌதமன் என்ற ஆசார்யனுக்கு ஸத்யகாமஜாபாலனுடைய சத்தியவிரதத்தினால் மிகவும் ஆனந்தம் உண்டாயிற்று. அவனுக்கு தன் தந்தையின் பெயர், கோத்திரம், தெரியாதிருந்த போதிலும், ஆசார்யனே தந்தையாக இருந்து, அவனுக்கு உபநயன சம்ஸ்காரம் செய்வதற்கு முன்வந்தார். இதற்கு முக்கியக் காரணம் அந்த பாலகன் சத்தியத்தைக் கைவிடாமல் இருந்ததே ஆகும். சத்யநிஷ்டனுக்கு குருவினுடைய அனுக்கிரகம் கிடைத்தே தீரும். இதுதான் சத்திய விரதத்தின் மகிமை.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*।। ஓம் 'தததம' ப்ரஹ்மவிதே வேதாந்தபாஸ்கராய நம: ।।*

**ப்ரஹ்ம 'தததமம்' ஜ்ஞேயம் புருஷாக்யம் ஸதாசிவம் ।**

**அந்தர்பஹிச்ச வ்யாபித்வாத் இதி வேதாந்தபாஸ்கர: ।।**

மங்களகரமான புருஷன் என்கிற பரப்பிரம்மத்தையே தததமம் என்று தெரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் அது உள்ளிலும், வெளியிலும் நிறைந்து இருக்கிறது.

## 35. பிரம்மம் 'தததம'ம் ஆகியிருக்கிறது

**ஸ ஏதமேவ புருஷம் ப்ரஹ்ம ததமம் அபச்யத் இதமதர்சமிதி !**

**ஐதரேயோபநிஷத் 1-3-13**

*அவன் இந்த புருஷனையே 'பிரம்மத்தை, ததமனை' ஆஹா நான் கண்டு கொண்டேன்' என்று கூறினான்.*

அவன் என்றால் அந்த பரமாத்மா. பரமாத்மனே இந்த சரீரத்தில் பிரவேசித்து ஜீவரூபத்துடன் காணப்படுகிறான். இவன் அந்த புருஷனையே பிரம்மம் என்று தெரிந்து கொண்டான். அந்த பரிபூர்ணனாகிய பரமேச்வரன் தான் இந்த பரிச்சின்னமாகிய (பிரிக்கப்பட்ட) ஜீவரூபத்தின் மூலம் தெரிகிறான் என்று பொருள்.

பிரம்மத்திற்கு இந்த உபநிடத மந்திரத்தில் ததமம் என்கிற உரிச்சொல்லை கொடுத்திருக்கிறது. தததமம் — (முழுவதும் வியாபகமானது). தததமம் என்று சொல்ல வேண்டியதை ததமம் என்று சொல்லியிருக்கிறது. ஒரு 'த' குறைந்திருக்கிறது. பரமாத்மா முழு விச்வத்தையும் நிறைந்து இருக்கக் கூடிய பரிபூர்ணன். பரமாத்மா இல்லாத பொருட்களே இல்லை. சின்ன சரீரத்திலிருந்து மிகப்பெரிய சரீரம் வரையிலும் வியாபித்திருக்கக் கூடியவன் ஆத்மாவே தான். இவன் ஆகாசத்தைப் போல் எங்கும் வியாபித்து இருப்பதால் 'தததமன்' என்று கூறப்படுகிறான். பரமாத்மாவில் அடங்காத வஸ்த்துக்கள் எதுவும் இல்லை.

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# வேத ஸூக்தங்கள்

நமது ஸனாதன மதத்தின் ஆணி வேராக இருப்பது நான்கு வேதங்கள் தான். **'வேதோகில தர்ம மூலம்'** என்றுரைப்பார் மனு. பாமரன் முதல் பண்டிதன் மட்டுமல்லாமல் ஸகல ஜீவராசிகளுக்கும் நன்மை செய்வது வேத சப்தம்.

தர்மார்த்த காம மோக்ஷத்தை காட்டிக் கொடுப்பவை வேதங்கள். மகரிஷிகளின் தவத்தினால் அவர்களது புத்தியில் ப்ரகாசித்தவை வேதங்கள். பெரும்பாலும் கடவுளின் புகழ் பாடுபவையாக இருந்தாலும் ஸமுதாயத்திற்கு வேண்டிய ப்ராத்தனைகளையும், நல் வாழ்விற்கு வேண்டிய வழிமுறைகளையும் கூறும்.

இவைகளின் பொருளை அவ்வளவு எளிதில் தெரிந்து கொள்ள முடியாது. வட மொழியில் நல்ல பாண்டித்யமிருப்பது அவஸ்யம். ஸாயனாசார்யார் போல் பாண்டித்யம் உள்ளவர்களால் தான் இது ஸாத்யம். அவரது பாஷ்யத்தை ஒட்டி சில முக்யமான ஸூக்தங்களின் பொருளைத் தருகிறோம். இதன் மூலத்தை யூ ட்யூபில் சுரேஷ் பத்ததி யில் கேட்கவும். கொடுக்கப்படும் ஸூக்தங்கள் விசேஷமானவை. வாசகர்கள் பொருளறிந்து கேட்கவும்.

**'ஸுப்ரமண்யாய வித்மஹே ஹிரண்யகர்பாய தீமஹி**
**தன்ன:ப்ரம்ம:ப்ரசோதயாத்' இது ஹிரண்யகர்ப காயத்ரி**

ஹிரண்ய கர்ப ஸூக்தம் 1

இந்த ஸூக்தம் ரிக் வேதத்தில் உள்ளது. **ரிஷி ஹிரண்ய கர்ப; ப்ராஜாபத்யர் சந்தஸ் த்ரிஷ்டுப் தேவதா க: ப்ரஜாபதி.** மொத்தம் 10 ரிக்குகள். 9 ரிக்குகளின் கடைசியில் **கஸ்மை தேவாய ஹவிஷா விதேம** என்ற கேள்வியில் முடியும். 'எந்த தேவனுக்கு அவியை அளிப்போம். என்னும் கேள்வி சரியானதல்ல. 9 ரிக்குகளிலும் ஹிரண்ய கர்பனைப் பாடிவிட்டு யாருக்கு என்னும் கேள்வி அபத்தம். கஸ்மை' எனபதற்கு ப்ரஜாபதி என்னும் ஸாயனாசார்யரின் உரை யே சரியானது. ஸூக்ததைப் பார்ப்போம்.

1. ஆதியில் ஹிரண்ய கர்பனே இருந்தான். அனைத்துக்கும் பிதாவாக இருந்தான். விண்ணையும், மண்ணையும் தாங்கினான். அந்த க: ப்ரஜாபதிக்கு தேவனுக்கு அவியை அளிப்போம்.

2. எவன் ஆத்மாவையும் பலத்தையும் தருவானோ எவனை தேவர்கள் உபாசிக்கிறார்களோ எவனுடைய நிழல் மரணத்தையும் மரணமில்லாத அமிர்தத்தையும் தருமோ அந்த ப்ராஜாபதிக்கு தேவனுக்கு அவியை அளிப்போம்.

3. எவன் தன்னுடைய கம்பீரத்தால் ப்ராணன் உடைய இமைக்கும் அனைத்து ஜீவராசிகளுக்கும் ராஜாவாக உள்ளானோ இருகால் ப்ராணிகளுக்கும் நாற்கால் ப்ராணிகளுக்கும் ராஜாவோ அந்த ப்ரஜாபதிக்கு தேவனுக்கு அவியை அளிப்போம்.

4. எவன் தன் மகிமையால் வெள்ளிப் பனி மலைகளையும் நீல நெடுங்கடல்களையும் படைத்தானோ நான்கு திசையும் எவனுக்கு கைகளோ அந்த தேவனுக்கு ப்ரஜாபதிக்கு அவியை அளிப்போம்.

5. எவன் விண்ணையும் மண்ணையும் தரித்தானோ ஜோதியையும் விண்ணின் மேலேயும் படைத்தானோ அந்தரிக்ஷத்ததத்தில் வாயுவை அளந்தானோ அந்த ப்ரஜாபதிக்கு தேவனுக்கு அவியை அளிப்போம்.

6. தன் உக்ரப் பார்வையால் எவன் பார்ப்பானோ பந்தத்துடன் தன் பலத்தை விளக்குவானோ அவன் மூலம் ஸூர்யன் ஒளி உமிழ்வானோ அந்த ப்ராஜாபதி தேவனுக்கு அவியை அளிப்போம்.

7. பெரும் நீர் வந்தபோது விஸ்வ கர்ப்பத்தைத் தாங்கி வந்தன. அக்னி ஸ்புரித்த போது கடவுளின் ஆத்மா தோன்றியது. அந்தப் ப்ரஜாபதி தேவனுக்கு அவியை அளிப்போம்.

8. எவன் தன் மகிமையால் வேள்விகளை உண்டாக்கினோ ஜலங்களை பரீக்ஷித்தானோ, சக்திகளின் கர்பமானவனோ, எவன் தேவர்களுக்கெல்லாம் தேவனோ அந்தப் ப்ரஜாபதி தேவனுக்கு அவியை அளிப்போம்.

8. மண்ணை படைத்தவனே, மண்ணில் ஸத்யத்தை விதைத்தவனே, விண்ணின் பிதாவே, எம்மைக் காப்பாற்று. ஜலத்தின் மகத்தான பிதாவே, உனக்கு அவியை அளிப்போம்.

9. ப்ரஜாபதியே ! சராசரங்களின் பிதாவே, நீயே அனைத்து படைப்பிலும் ஊடுருவி உள்ளாய். எங்கள் ஆசைகளை பூர்த்தி செய். பல தனங்களுக்கு அதிபதியாக ஆவோமாக

**ஒப்பிடுக : திருவாய் மொழி, சம்பந்தரின் திருவெழு கூற்றிருக்கை .**

(தொடரும்)

ப்ரதீபப் பேழை

# பிறவிக் கடலைத் தாண்டியவர்

பிறவிகளில் மனிதப் பிறவி கிடைப்பது மிக அரிது. இந்த மேலான மனிதப் பிறவியை அடைந்தவனும், இயற்கையில் அமைந்துள்ள நல்லறிவைக் கொண்டு மட்டும் நடப்பவனுமான ஜீவன் பிறப்பதும், இறப்பதும் திரும்பப் பிறப்பதுமாக மாறி மாறிச் சொல்லொணாத் துயரத்தை அடைகிறான். இந்த ஜீவனை அழியாச் சுகத்தில் இருத்த வேண்டி கருணைக் கடலான ஆண்டவன் ஆதியில், உலகப் படைப்புக்கு முன்னர், மனிதன் அல்லற்படாதபடி நடக்கவேண்டிய முறையை விளக்கும் தமது ஆணையான வேதங்களை வெளியிட்டார். அதன் கருத்தை விளக்க வேண்டி தாமே அவ்வப்பொழுது குருவாகவும் ஆவிர்ப்பவிக்கிறார்; ஞானமார்க்கத்தை உபதேசிக்கிறார். அவ் உபதேசங்களைக் கேட்டு, அதை மனனம் செய்து, அதிலேயே ஈடுபட்டு ஞானத்தை அடைந்து பேரானந்தத்தைப் பெறுகிறான் ஜீவன். இவ்வாறு ஜீவனின் நிலையை உயர்த்தவே பகவான் பரமசிவன் ஸ்ரீ சங்கர பகவத் பாத குருவாக அவதரித்தார்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதர் ச்ருதி, ஸ்ம்ருதி, புராணங்கள் மூலம் ஸநாதன மதத்தை உலகில் மீண்டும் நன்கு நிலைநாட்டி, அவற்றின் கருத்துக்களை மிகக் கருணையுடன், பாஷ்ய நூல்களின் வாயிலாக உலகிற்குப் புகட்டினார். மேலும் ஸர்வமத ஸாமரஸ்ய மனப்பான்மையுடன் அவரவர்களின் அதிகாரத்திற்குத் தக்கவாறு, லோக க்ஷேமம் புரியவல்ல வைதிக வர்ணாசிரம தர்மங்களில் மக்களை ஈடுபடச் செய்து, சைவம், வைணவம், காணபத்யம், கௌமாரம், ஸௌரம் என்ற ஆறுவித பக்தி மார்க்கங்களை வேத வழியிலேயே அவரவர்களின் ருசிக்குத் தக்கவாறு ஏற்படுத்தினார். அத்வைத தத்வ அனுபவ ரூபமான ஞானத்தை உபநிஷத்துக்களில் கண்டுள்ளபடி மக்களுக்கு உபதேசித்துக் கொண்டு குமரி முதல் இமயம் வரை விஜய யாத்திரை செய்தார். நாஸ்திகமான புத்த, சமண மதங்களின் தீவிர பிரசாரங்களால் க்ஷணதசையை அடைந்திருந்த வைதிக மதத்தை புனருத்தாரணம் செய்தார்.

ஸ்ரீ சங்கர பகவத் பாதரின் அவதார காலம் கலி பிறந்து 2598 வருஷங்கள் சென்ற பிறகு (கி.மு. 502 வருஷத்துக்கு முன்பு) நந்தன வருஷம் வைசாக மாதம் சுக்ல பக்ஷ பஞ்சமி அன்று ஆகும்.

ஸப்த மோக்ஷபுரிகளில் ஒன்றும், பஞ்ச மகாபூத க்ஷேத்திரங்களில் ப்ருத்வீ க்ஷேத்ரமாயும், தேவியின் பரமஸாந்நித்யம் பெற்றதுமான க்ஷேத்ரம் ஸ்ரீ காஞ்சீ திவ்ய க்ஷேத்திரம். காஞ்சி க்ஷேத்திரத்தில் தான் பகவத்பாதர் தன் வாழ்நாளின் கடைசிக் காலத்தைக் கழித்து அங்கேயே ஸித்தி பெற்றார். அத்வைத தத்வத்தைப் பரப்பவும், தர்ம வ்யவஸ்தை செய்யவும் சிஷ்யர்களைக் கொண்டு ஆங்காங்கே மடங்களை நிறுவினார்.

ஸ்ரீ காஞ்சீ நகரில் சங்கர பகவத்பாதரால் ஸ்தாபிக்கப் பெற்றது ஸ்ரீ காமகோடிபீட குருபரம்பரை. ஸ்ரீ ஸ்வர்ண காமாக்ஷி தேவியின் ஸந்நிதியில் விளங்கும் வித்யா பத்ராஸனம், வித்யாராஜ பீடம் என்ற பெயருடைய ஸர்வக்ஞ பீடம் ஏறி, ஸ்ரீ சங்கரர் பிரகாசித்து வசித்து வந்தார். ஆகையினால் ஸர்வக்ஞாச்ரமம் என்ற பெயரினால் புகழ் பெற்றது ஸ்ரீ சாரதாமடம் என்னும் இந்தக் காமகோடி பீடம். மூல காமாக்ஷியின் ஸந்நிதியில் ஆதிசங்கரராலேயே ஸ்தாபிக்கப் பெற்ற ஸ்ரீசக்ர ரூபமான இந்தக் காமகோடி பீடத்தின் ஆதிபத்யம் பெற்று அவிச்சின்னமாக வரும் ஸ்ரீ ஜகத்குரு பரம்பரையில், பகவத்பாதரின் மூலாம்னாய பரம்பரையில், அறுபத்தெட்டாவது ஜகத்குருவாக விளங்கி வரும் ஜீவன் முக்தர் ஸ்ரீ சந்த்ரசேகரேந்திர ஸரஸ்வதீ ஸ்வாமிகள் ஆதி ஆசார்யர்களைப் போலவே எல்லா விதத்திலும் மேன்மையுடன் விளங்குவது உலகம் அறிந்த உண்மை.

இவர்கள் பராபவ வருஷம், மாசி மாதம் 2ஆம் தேதி (13-2-1907) பீடாரோஹணம் செய்து ஜகத்குருவாக தீக்ஷை பெற்றார்கள். பீடாரோஹண ஐம்பதாவது ஆண்டு விழா பூர்த்தி கலவையில், அவர்களுடைய குரு, பரமகுருவின் பிருந்தாவனங்களின் ஸந்நிதியில் நிகழ்ந்தது. பீடாரோஹண அறுபதாவது ஆண்டு விழா பூர்த்தி ஆந்த்ரதேச யாத்ரையின் போது அஹோபில க்ஷேத்திரத்தில் நடந்தது. வரும் மாசி மாதம் இரண்டாம் தேதி அவர்கள் பீடாரோஹணம் செய்து எழுபத்தொன்றாம் ஆண்டு தொடங்குகிறது. இதுவரை எழுபது வியாஸ பூஜைகளை நடத்தியுள்ளார்கள்.

ஜகத்குரு பரம்பரையில் தமக்கு அடுத்த குருவாக ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளை நியமித்து, ஜனங்களுக்கு நல்லுபதேசத்தையும் தர்ம வ்யவஸ்தா தத்வங்களையும், பீடத்தின் நிர்வாஹத்தையும் கவனிக்கச் செய்துள்ளார்கள். தற்காலம் அவர்கள் வாழ்ந்துவரும் உன்னதநிலை இந்த ஸ்லோகக் கருத்தில் அடங்கியுள்ளதே ஆகும்.

कदाचिन्मोनस्थः क्वचिदपि च वाग्वादनिरतः
कदाचित्सानन्दं हसितरभसस्त्यक्तवचनः ।
कदाचिल्लोकानां व्यवहृतिसमालोचनपरो
मुनिर्न व्यामोहं भजति गुरुदीक्षाक्षततमाः ॥

**கதாசின் மௌனஸ்த: க்வசிதபி ச வாக்வாத நிரத:**
**கதாசித் ஸாநந்தம் ஹஸிதரபஸஸ் தியக்த வசன: ।**
**கதாசில் லோகானும் வ்யவஹ்ருதி ஸ்மாலோசன பரோ**
**முனிர் ந வ்யாமோஹம் பஜதி குருதீக்ஷாக்ஷததமா: ।।**

சில சமயம் மௌனமாகயிருப்பார். சில சமயம் நன்றாக வாதம் செய்து கொண்டிருப்பார்: சில சமயம் ஆனந்தத்தை வெளியிடும் சிரிப்பின் வேகத்துடன் கூடின வார்த்தைகளை வழங்குவார். சில சமயம் மக்களின் குறைகளைக் கேட்டு அநுக்ரஹிப்பார். தம் குருநாதனின் அருள் பெற்ற ஞானச் சுடரான முனிவர் எந்நிலையிலும் தான் கலக்கம் கொள்வதில்லை.

பிறவிக் கடலைத் தாண்டி ஜீவன் முக்த நிலையில் அமர்ந்து லோகத்தை ரக்ஷித்துவரும் இம்மகானின் பீடாரோஹண எழுபத்தொன்றாம் ஆண்டு விழாவை அகிலமெங்கும் அகம் மகிழக் கொண்டாடி அவர்களின் அருளைப் பெறுவோமாக!



# தை மாத ஸ்ரீ மடத்தின் விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விவரம் |
|---|---|---|
| *14-01-2025* | செவ்வாய் | உத்தராயண புண்ய காலம் ; பொங்கல் பண்டிகை |
| *22-01-2025* | புதன் | ஸ்வாதி வேத பாராயணம் |
| *24-01-2025* | வெள்ளி | அனுஷம் தேர் — அனுஷம் வேத பாராயணம் |
| *25-01-2025* | சனி | ஏகாதசி |
| *26-01-2025* | ஞாயிறு | மூலம் தேர் — மூலம் வேத பாராயணம் — த்வாதசி |
| *27-01-2025* | திங்கள் | ப்ரதோஷ பூஜை |
| *28-01-2025* | செவ்வாய் | உத்ராடம் தேர் — உத்ராடம் வேத பாராயணம் |
| *30-01-2025* | வியாழன் | அவிட்டம் தேர் — அவிட்டம் வேத பாராயணம் |
| *08-02-2025* | சனி | ஏகாதசி |
| *09-02-2025* | ஞாயிறு | த்வாதசி |
| *10-02-2025* | திங்கள் | ஸோம மஹா ப்ரதோஷம் |
| *17-01-2025 ; 24-01-2025; 31-01-2025 ; 07-02-2025;* வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை | | |

# அநுகீதாபர்வம்

(அர்ஜுனன் கீதையை மறுபடியும் உபதேசிக்கும்படி
கோவிந்தரைக் கேட்டதும், அவர் ஸித்தகாஸ்யப ஸம்வாதத்தைக் கூறியதும்.)

ஜனமேஜயர், 'பிராம்மணரே! பகைவர்களைக் கொன்றுவிட்டு அச்சபையில் வஸிக்கின்றவர்களும் மஹாத்மாக்களுமான, கிருஷ்ணார்ஜுனர்களுள் என்ன பேச்சு நடந்தது ?' என்று வினவ, வைசம்பாயனார் சொல்லலானார்.

பார்த்தன் பகைவரற்றதான தனது ராஜ்யத்தை அடைந்து வாஸுதேவருடன் சேர்ந்து ஸந்தோஷமுள்ளவனாகத் திவ்யமான அந்த ஸபையில் விளையாடினான். அரசரே! அவ்விருவரும் ஸந்தோஷமுள்ளவர்களாகச் சுற்றத்தார்களால் சூழப்பட்டு ஸ்வர்க்கத்திற் கொப்பான அச்சபையின் ஓரிடத்திற்குத் தற்செயலாகச் சென்றார்கள். பிறகு, பாண்டு குமாரனான அர்ஜுனன் வாஸுதேவருடன் அழகான அச்சபையைப் பார்த்து ஸ்ந்தோஷமடைந்து பின்வரும் வசனத்தைச் சொல்லலானான். நீண்ட கைகளுள்ளவரே! தேவகியின் மைந்தரே! யுத்தம் நேர்ந்த பொழுது உம்முடைய மகிமையையும், ஈஸ்வர ஸ்வரூபத்தையும் நான் தெரிந்துகொண்டேன். கேசவரே! புருஷ ஸ்ரேஷ்டரே! முன்பு நீர் அன்புடன் சொன்ன விஷயத்தையெல்லாம் மனத்தில் கவலையுற்ற நான் மறந்துவிட்டேன்.

எனக்கு அந்த விஷயங்களை அடிக்கடி (கேட்க) மிக்க அவா இருக்கிறது. மாதவரே! நீரோ சீக்கிரத்தில் துவாரகைக்குப் போகிறவர் போல இருக்கிறீரே என்றான். இவ்வாறு சொல்லக் கேட்டவரும் சிறந்த தேஜஸுள்ளவரும் பேசுகிறவர்களுள் சிறந்தவருமான வாஸுதேவர் அந்த அர்ஜுனனைத் தழுவி மறுமொழி கூறலானார். பார்த்த! நான் உனக்கு ரஹஸ்யமும் ஸனாதனமுமான தர்மத்தின் ஸ்வரூபத்தையும் சாஸ்வதமான எல்லா உலகங்களையும் சொல்லித் தெரிவித்தேன். நீ புத்திக் குறைவால் அதனை மனத்தில் தரிக்காதது எனக்கு மிகப்பெரிய அப்பிரியமாக இருக்கிறது. இப்பொழுது, மறுபடியும் அது எனக்கு நினைவுக்கு வர மாட்டாது.

பாண்டவ! நீ ஸ்ரத்தையில்லாதவனும், புத்திகெட்டவனுமாயிருக்கிறாய். இது நிச்சயம். தனஞ்சய! மறுபடியும், முழுதும் சொல்ல முடியாது. அந்தத் தர்மமோ ப்ரம்மத்தின் ஸ்தானத்தை அறிவதற்கு மிகவும் போதுமானது. அதனை முழுதும் மறுபடியும் அவ்வாறே சொல்ல என்னால் முடியாது. நான் சித்தத்தை ஒருவழிப்படுத்தி அந்தப் பரப்பிரம்மத்தையன்றோ சொன்னேன்? ஆனால், (இப்பொழுது) அந்த விஷயத்தில்

புராதனமான ஓர் இதிஹாஸத்தைச் சொல்லுகிறேன். அதனைத் தெரிந்து கொண்டால் மேலான கதியைப் பெறுவாய். தர்மத்தைச் செய்கிறவர்களுள் சிறந்தவனே! எல்லாவற்றையும் நான் சொல்லுகிறேன்; கேள். பகைவரை அடக்குபவனே! (ஒருவராலும்) அவமதிக்க முடியாத ஒரு பிராம்மணர் ஸுவர்க்க லோகத்திற்கும், பிரம்ம லோகத்திற்கும், போய்விட்டு வந்தார். அவரை நாம் பூஜித்தோம். பரதஸ்ரேஷ்டனே! பார்த்த நம்மால் வினவப்பட்ட அவர், திவ்யமான முறையுடன் சொல்லிய அதனைச் சொல்லுகிறேன்; கவலையின்றிக் கேள்.

**பிராம்மணர் சொல்லியது:-** வாஸுதேவரே! மஹாத்மாவே! பிராணிகளிடம் கருணையால் எனது மோஹத்தை நீக்கிய எந்த மோக்ஷ தர்மத்தைப்பற்றி என்னிடம் கேட்டீரோ அதனை நான் உமக்கு உள்ளபடி சொல்லுகிறேன். மாதவரே! நான் சொல்லும் போது ஜாக்ரதையுடன் கேளும். தவமுள்ளவரும் தர்மத்தை நன்கு உணர்ந்தவருமான காஸ்யபரென்னும் ஒரு பிராமணர், தர்மங்களைப் பற்றிய சாஸ்திர ரஹஸ்யத்தை அறிந்தவரும், எல்லா வேதங்களையும் அறிந்தவரும் சாஸ்திரத்தாலுண்டான ஞானத்தின் முடிவையும், யோகத்தாலுண்டான ஞானத்தின் முடிவையும் அடைந்தவரும் உலகத்தின் தத்வார்த்தத்தில் ஸமர்த்தரும், ஸுக துக்கங்களை அறிந்தவரும், பிறவிகளை நினைக்கும் தத்வத்தை அறிந்தவரும், புண்ய பாவங்களை அறிந்தவரும், உயர்ந்தனவும், தாழ்ந்தனவுமான பிராணிகளுக்குக் கர்மங்களாலுண்டான கதியைக் கண்டவரும், முக்தன் போல ஸஞ்சரிப்பவரும், ஸித்தரும், மிக்க அடக்கமுள்ளவரும், இந்திரியங்களை அடக்கினவரும், பிரம்மதேஜஸினால் ஜ்வலிப்பவரும், எங்கும் ஸஞ்சரிப்பவருமான ஓர் பிராம்மணரை அடைந்தார்.

மேதாவியும் பிராம்மண ஸ்ரேஷ்டருமான அந்தக் காஸ்யபர் அந்த அந்தணரை அந்தர்த்தானகதியை அறிந்தவரும், மறைந்திருப்பவர்களும் சக்ரத்தைத் தரிப்பவர்களுமான, ஸித்தர்களுடன் செல்பவரும், ஏகாந்தத்தில் அவர்களுடன் பேசிக் கொண்டு உட்கார்ந்திருப்பவரும் காற்றுப் போலப் பற்றுதலின்றித் தற்செயலாகச் செல்லுகின்றவருமாயிருப்பதாகக் கேள்வியுற்று அருகில் சென்று தர்மத்தை விரும்பி மிக்க அமைதியும், சிறந்த பக்தியுமுள்ளவராக அப்பொழுது அவருடைய பாதங்களில் விதிப்படி நமஸ்கரித்தார்.

காஸ்யபரானவர், ஆச்சர்யமாக இருப்பவரும் பிராம்மணஸ்ரேஷ்டருமான அவரைக் கண்டு வியப்புற்றுச் சிறந்த பணிவிடையால் குருவான அவரை

ஸந்தோஷப்படுத்தினார். காஸ்யபர், அவையனைத்தையும் ஏற்றுக்கொண்டவரும் கல்வியும், நல்லொழுக்கமும் பொருந்தியவருமான அவரைக் குருவுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து அந்த ரங்கத்துடன் ஸந்தோஷப்படுத்தினார். ஜனார்த்தனரே ! அந்தக் குருவானவர் மனமகிழ்ந்து கிருபையுடன் சிஷ்யரான அந்தக் காஸ்யபருக்குச் சிறந்த ஸித்தியை நன்றாகப் பார்த்து எதைச் சொன்னாரோ அதை என்னிடமிருந்து கேளும். அந்த ஸித்தர் சொல்லலானார்:-


'ஐயா! மனிதர்கள் பலவித கர்மங்களால் இவ்வுலகில் அடைய வேண்டியதையும் தனித்த புண்ணியங்களால் தேவலோகத்தில் இருப்பையும் அடைகிறார்கள்; ஓரிடத்திலும் அழிவற்ற ஸுகத்தை அடைகிறதில்லை; ஓரிடத்திலும் சாஸ்வதமாக இருக்கிறதில்லை; ஸ்ரமப்பட்டு அடையப்பட்ட பெரிய ஸ்தானத்தினின்றும் அடிக்கடி நழுவுதல் ஏற்படுகிறது. காமமும், கோபமும், சூழ்ந்தவனும் ஆசையால் மதிமயக்கமுள்ளவனுமான நான் பாவங்களைச் செய்து கஷ்டங்களும் அசுபங்களுமான கதிகளை அடைந்தேன்; அடிக்கடி மரணத்தையும்; அடிக்கடி ஜனனத்தையும் அடைந்தேன்; பலவித ஆகாரங்களைப் புஜித்தேன். பலவகை ஸ்தனங்களைப் பானம் செய்தேன்; பலவகையான தாய்களையும், வெவ்வேறுவிதமான தந்தைகளையும் பார்த்தேன். குற்றமற்றவனே ! விசித்ரமான ஸுகங்களையும், துக்கங்களையும் நான் அனுபவித்தேன். பலமுறை பிரியர்களை விட்டுப் பிரிந்தும் ப்ரியமில்லாதவர்களுடன் சேர்ந்தும் வஸித்தேன்.

ஸ்ரமப்பட்டுத் தனத்தை ஸம்பாதித்து அந்தத்தனத்தைப் பறிகொடுத்தேன். உறவினரிடமிருந்தும், பிறரிடமிருந்தும் மிகக் கஷ்டமான அவமானங்களையும், மிகக் கொடியவைகளும் சரீரத்திலும், மனத்திலும் உண்டானவைகளுமான, துன்பங்களையும் உக்கிரமானவையும் பொறுக்க முடியாதவையுமான கட்டுவது கொல்லுவது என்னும் அவமானங்களையும் அடைந்தேன். யமலோகத்தில் நரகத்தில் விழுந்து துன்பங்களை அனுபவித்தேன். நான் இவ்வுலகில் மூப்பையும் ரோகங்களையும் (விருப்பு வெறுப்புக்கள் முதலிய) த்வந்த்வங்களாலுண்டான அநேக வ்யஸனங்களையும் எப்பொழுதும் மிக அனுபவித்தேன்.

பிறகு, ஒரு ஸமயம் மிக அவமதிக்கப்பட்டவனும் மிக்க துயரத்தால் பீடிக்கப்பட்டவனுமான நான் ஒழிவையடைந்து லோகவ்யவ ஹாரத்தை விட்டேன். நான் இவ்வுலகில் இந்த (ஸித்த) மார்க்கத்தைத் தெரிந்து அப்யஸித்தேன். அதனால், நான் மனந்தெளிந்து இந்த ஸித்தியை அடைந்தேன். நான் மறுபடியும் இவ்வுலகத்திற்கு

வரமாட்டேன். பிரஜைகளின் ஸ்ருஷ்டி தொடங்கி மோக்ஷம் வரையில் என்னுடைய சுபமான கதிகளையும் உலகங்களையும் நான் பார்க்கிறேன். பிராம்மண ஸ்ரேஷ்ட! அவ்வாறே, உத்தமமான இந்த ஸித்தியையும் அடைந்தேன். இவ்வுலகத்தைக் காட்டிலும் மேலான ஸத்யலோகத்தை அடையப் போகிறேன். மீண்டும் அதைக் காட்டிலும் மிகச் சிறந்ததும் அவ்யக்தமும் பிரம்மத்தின் பதமுமான மோக்ஷத்தை அடையப் போகிறேன். உனக்கு இதில் வேண்டாம். நான் மறுபடியும் இந்த மானிடலோகத்திற்கு வரப் போகிறதில்லை. சிறந்த அறிவுள்ளவனே! உன்னிடத்தில் பிரீதியுள்ளவனாக இருக்கிறேன். உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்? சொல். நீ எதை அடைய விரும்பி (என்னிடம்) வந்தாயோ, அதற்கு ஸமயம் இதோ வந்துவிட்டது. நீ எதற்காக என்னிடம் வந்தாயோ அதனை நான் அறிவேன். நான் சீக்கிரத்தில் (மேலுலகம்) போகப் போகிறேன். அதனால், உன்னைத் தூண்டினேன். பண்டிதனே! நான் உன்னுடைய ஒழுக்கத்தால் மிக்க பிரீதியுள்ளவனாகிறேன். நீ தெரிந்து கொள்ள விரும்பியவற்றை எல்லாம் கேள். உனக்குச் சொல்லுகிறேன். உன்னுடைய அறிவைக் கௌரவித்து மிகவும் பூஜிக்கிறேன். காஸ்யப! என்னை நீ தெரிந்து கொண்டதால் சிறந்த புத்தியுள்ளவனாக இருக்கிறாய் என்று சொன்னார்.

★★★★



**வாசகர்கள் அனைவருக்கும்**

**இனிய**

**புத்தாண்டு பொங்கல் நல்வாழ்த்துக்கள்**

# முகாம் நிகழ்ச்சிகள்

முகாம் நிகழ்ச்சிகளின் தொடர்ச்சி



**நவ 21** - பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் சகடபுரம் ஸ்ரீ வித்யா பீடத்திற்கு விஜயம் செய்தார்கள். அது சமயம் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளுக்கு வரவேற்பு நிகழ்வு நீண்ட ஊர்வலமாக நடைபெற்றது.

உடுப்பியில் காஞ்சி காமகோடி பீடாதிபதி சங்கராசார்ய சுவாமிகள் **கோடி கீதை லிகித யக்ஞத்தினை** துவக்கி வைத்து அருளினார்கள். தொடர்ந்து உடுப்பி எம்.எஸ்பி கல்லூரிக்கு விஜயம் செய்து மாணவர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு அருளாசி வழங்கினார்கள்.

**நவ 22** - சகடபுரத்தில் பக்தர்களுக்கு பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் அளித்து அருளினார்கள்.

**நவ 23** - ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசார்ய சுவாமிகள் ஸ்ரீ ராமச்சந்திரபுர மடத்திற்கு விஜயம் செய்தார்கள். தொடர்ந்து திவ்ய க்ஷேத்ர ஹரிஹரபுராவில் பக்தர்களுக்கு அனுக்ரஹ பாஷணம் அளித்து அருளினார்கள், ஸ்ரீ வித்யா பீடத்தில் சண்டி ஹோம பூர்ணாஹுதி நிகழ்ச்சியும் நடைபெற்றது,

**நவ 24** - தீர்த்தஹல்லியில் பூஜ்ய ஸ்ரீ ஜகத்குரு முன்னிலையில் தர்மசபா நேரலையில் நடைபெற்றது.

**நவ 26** - திருப்பதியில் மாலை பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் பிரதோஷ பூஜை நடத்தி அருளினார்கள்.

**டிச 1** - இன்று கிழக்கு தாம்பரம் ராஜகீழ்பாக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீ மஹா ஸ்வாமி வித்யா மந்திர் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள **''ஜயேந்திரம்''** என்ற கண்காட்சியையும், இந்திய அரசியலமைப்பின் 75-வது ஆண்டை நினைவு கூறும் வகையிலான கண்காட்சியையும் பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டது. அது சமயம் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் நிகழ்ச்சிக்கு வருகை தந்த அழைப்பாளர்கள் மற்றும் பக்தர்களுக்கு அனுக்ரஹபாஷணம் அளித்து அருளிச் செய்தார்கள்.

**டிச 8** - திருப்பதி ஸ்ரீ சங்கரமடம் பாதுகா மண்டபத்தில் முகாமிட்டுள்ள பூஜ்யஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் திருமலைக்கு விஜயம் செய்தார்கள். திருமலையில் பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் திருக்கோவில் மரியாதைகளுடன் வரவேற்கப்பட்டார்கள்.

முன்னதாக பூஜ்ய ஸ்ரீ சங்ராசார்ய சுவாமிகள் மேட்டு மண்டபத்திலிருந்து வேத கோஷங்கள், மங்கள வாத்தியங்களுடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள். ஸ்ரீ வாரி திருக்கோவிலிருந்து ஸ்ரீ சடாரி கொண்டு வரப்பட்டு பூஜ்ய ஸ்ரீ ஆச்சார்யாளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பிரதான சந்நிதானத்தில் ஸ்ரீ வாரி தரிசனம் செய்து மங்கள ஹாரத்தியும் நடைபெற்றது. பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் வெண்சாமர சேவை வழங்கினார்கள். தொடர்ந்து ஸ்ரீ ஆச்சார்யாள் கோவிலை வலம் வந்து மாட வீதிகளில் திருக்கோவில் திருக்குடைகளுடன் ஊர்வலமாக திருமலையில் உள்ள ஸ்ரீ சங்கரமடத்திற்கு எழுந்தருளினார்கள். ஏராளமான பக்தர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குரு தரிசனமும், தெய்வ தரிசனமும் செய்தார்கள்.

**டிச 12** - ஜகத்குரு சங்கராசார்ய மூலாம்நாய ஸர்வக்ஞ ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் காணொலி காட்சி வாயிலாக அயோத்தியில் நடைபெற்ற ராம யந்திர பிரதிஷ்டையும், சண்டி ஹோம பூர்ணாஹுதியையும் கண்டு அனுக்ரஹித்து அருளாசி வழங்கினார்கள்.

**டிச 18** - பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகள் திருப்பதியில் மூன்று கால பூஜைகள் முடித்து முகாம் காஞ்சிபுரத்திற்கு இரவு வந்து சேர்ந்தார்கள்.

**டிச 19** - இன்று முதல் காஞ்சி ஸ்ரீ மடத்தில் நித்ய பூஜைகள் நடைபெற்று வருகிறது.

**டிச 21** - மகராயன புண்ய காலத்தை முன்னிட்டு ஸ்ரீ மடத்தில் விசேஷ பூஜைகள் நடைபெற்றன.

**டிச 22 -** பூஜ்ய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் சென்னை திருவான்மியூரில் 64ம் ஆண்டு வேத தர்ம சாஸ்த்ர பரிபாலன சபை மூலம் வேத சம்மேளனம் விமரிசையாக நடைபெற்றது,

**டிச 25 -** பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா ஸ்வாமிகளின் ஆராதனை மஹோத்ஸவத்தை முன்னிட்டு மூன்று நாட்கள் 24-12-2024 முதல் சதுர்வேத பாராயணம் நடைபெற்றது.

**டிச 26 -** 27-12-2024 ல் எர்ணாகுளம் கிராம ஜன சமூகம் சார்பில் நடைபெற்ற சகஸ்ர ஸுவாசினி போஜன நிகழ்விற்கு பூஜ்ய ஸ்ரீ காஞ்சி சங்கராசார்ய சுவாமிகள் அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள். நாராயணீய பாராயணமும் நடைபெற்றது.

**டிச 27 -** ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் 31வது ஆராதனை மஹோத்சவம் ஸ்ரீ மடம் பிருந்தாவனத்தில் நடைபெற்றது. 24-12-2024 முதுல் 26-12-2024 வரை சதுர்வேத பாராயணம் நடைபெற்றது. மஹோத்ஸவ தினத்தன்று ஏகாதச ருத்ர ஜப ஹோமம், வஸோத்தாரா, பூர்ணாஹுதி மற்றும் மஹா அபிஷேகம் பிருந்தாவனத்தில் நடைபெற்றது. முன்னதாக பஞ்சரத்ன கீர்தனை ஆஸ்தான சங்கீத வித்வான்களால் நடைபெற்றது. தீர்த்த நாராயண பூஜை பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் முன்னிலையில் பிருந்தாவனத்தில் நடைபெற்றது. பல்வேறு திருக்கோவில்கள், திருமலை திருப்பதி தேவஸ்தானம், காஞ்சி ஸ்ரீ காமாக்ஷி அம்மன் கோவில், சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் கோவில், திருவானைக்கோவில் ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி கோவில் ஆகிய இடங்களிலிருந்து வரப்பெற்ற பிரசாதங்கள் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளால் பிருந்தாவனத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. ஆராதனை மஹோத்ஸவத்தை தொடர்ந்து பக்தர்களுக்கு பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் அக்ஷதை பிரசாதம் வழங்கி அருளினார்கள்.

மாலை ஜண்டமேள, மங்கள வாத்தியங்களுடன் சுவர்ண ரதோத்ஸவம் நான்கு ராஜவீதிகளிலும் நடைபெற்றது. ஸ்ரீ மடத்தின் ஆஸ்தான வித்வான் ஸ்ரீ வி. ராஜேஷ் அவர்களின் மாண்டலின் இசை நிகழ்ச்சி பக்க வாத்தியங்களுடன் நடைபெற்றது. முன்னதாக ஒருங்கிணைந்த வேத பாடசாலை வித்யார்த்திகளின் பக்தி பாடல்கள் நிகழ்ச்சி நடைபெற்றது.

**ஜெய ஜெய சங்கர ஹர ஹர சங்கர**

# சுக நாஸ உபதேசம்

ஸ்ரீ வேணுகோபால சர்மா

சுமார் 7 ஆவது நூற்றாண்டில் பிறந்தவர் பாணபட்டர். மிகச்சிறந்த கவி **'பாணோச்சிஷ்டம் ஸர்வம்'** என்று கவிகளாலும் பண்டிதர்களாலும் கொண்டாடப்பட்டவர். **'கௌடீ'** ரீதியில் எழுதப்பட்ட அவரது நூல்கள் ஜகத் ப்ரசித்தமானவை. வாக் சாதுர்யம் நீண்ட ஸமாஸங்கள், அத்புதமான கற்பனை வளம் என்று பல வகையான சிறப்புகளைக் கொண்டவை அவரது காவ்யங்கள். **'சண்டீ சதகம்'** என்னும் க்ரந்தத்தில் சக்தியின் புகழைப் பாடுகிறார். **'ஹர்ஷ சரித்ரம்'** என்னும் நூலில் ஹர்ஷ அரசனின் சரித்ரத்தைக் கூறுகிறார். **'காதம்பரி'** என்னும் உரை நடைக் காவ்யத்தில் மூன்று தலை முறைக் காதலை மிக அழகாக விவரிக்கிறார். அந்த காத்மபரியில் தான் சுக நாசர் என்னும் ரிஷி சந்த்ராபீடன் என்னும் இளவரசனுக்கு வாழ்வியல் தத்வங்களை மிக அழகாக உபதேசிக்கிறார். இதை அனைவரும் முக்யமாக இளைஞர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக மொழி பெயர்த்துத் தருகிறோம். படிக்கவும் மூலத்தையும் ராகத்தோடு படிக்கவும். மிக ரஸமாக இருக்கும். (ஆர்)

சமஸ்கிருத இலக்கியம் மூன்று வகைப்பட்டது - **गद्यम्, पद्यम्, चम्पूः** அதில் **पद्यम्** என்பது கவிதைகளால் அமைக்கப்பட்ட ஒரு காப்பியம். **गद्यम्** என்பது உரைநடை இலக்கியம். கவிதை உரைநடை இரண்டையும் கலந்ததுதான் **चम्पूः** .

**'गद्यं कवीनां निकषं वदन्ति'** - கத்யம் என்பது கவிகளுக்கு ஒரு உராய்கல் போல் கூறுகிறார்கள். சம்ஸ்கிருத இலக்கிய உலகில் கத்யம் எழுதும் கவிகள் தான் சிறந்த கவிகள் என்று போற்றப்படுகிறார்கள். அதில் மிகச்சிறந்தவர் பாணபட்டர். ஏனெனில் அவருடைய **कादम्बरी** மற்றும் **हर्षचरितम्** எனும் இரு நூல்கள் உலகில் மிகச்சிறந்தன என்று கருதப்படுகின்றன. உரைநடையின் அழகு, பதங்களின் அமைப்பு, வார்த்தைகளின் கோர்வை, கருத்துக்களின் உரையாடல், இயற்கை வர்ணனை, மக்களின் மனோபாவம் - இப்படி பல விஷயங்கள் அடங்கியுள்ளன. ஆகையால் இந்த இரு நூல்கள் சமஸ்கிருத உரைநடை இலக்கிய உலகில் ஒரு பெரும் இடத்தை வகிக்கின்றன.

கவி பாணபட்டர் 600 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹர்ஷவர்தனன் எனும் ஒரு சக்ரவர்த்தியின் காலத்தில் வாழ்ந்தார். அவர் எழுதிய **कादम्बरी** முழுமையாக ஒரு

கற்பனைக் கதை - சூத்ரகன் எனும் அரசன் சபையில் வீற்றிருக்கும் பொழுது ஒரு பெண் கூண்டில் ஒரு கிளியை எடுத்துக் கொண்டு வருகிறாள். பேசும் திறன் வாய்ந்த அந்தக் கிளியைப் பார்த்து வியந்த அரசன் அதன் கதையைக் கேட்க ஆவல் கொள்கிறான். கிளி தன் கதையைக் கூற ஆரம்பிக்கிறது.

விந்திய மலைப்பிரதேசத்தில் ஒரு பெரிய மரத்தில் தந்தை தாயுடன் வாழும் அந்தக் கிளி ஒரு சமயம் வேடுவர்களால் கீழே தள்ளப்பட்டு பரிதாப நிலையை அடைந்தது. அப்பொழுது ஜபாலி மகரிஷியின் மகனான ஹாரீதன் கிளியைத் தன் தந்தையிடம் காண்பிக்கிறான். முக்காலமும் அறிந்த அந்த ஞானி கிளியின் பூர்வ ஜென்ம கதையைக் கூற ஆரம்பிக்கிறார்.

தாராபீடன் எனும் அரசன் உஜ்ஜயினி நகரத்தை ஆண்டு வந்தார். அவரது மனைவி விலாஸவதி. இருவரின் பிள்ளை சந்திராபீடன். அரசனின் அமைச்சரின் பெயர் சுகநாஸர். படிப்பை முடித்த இளவரசன் சந்திராபீடன் சத்வம், வீரம் மற்றும் அர்ஜவ குணங்கள் நிறைந்தவன். அமைச்சர் சுகநாஸர் ஒரு அனுபவம் வாய்ந்த மந்திரி. அவர் இளவரசன் சந்திராபீடனுக்கு முடி சூடுவதற்கு முன்பு அன்புடன் உபதேசம் செய்கிறார். அவனது இளமை, அழகு, ஆதிக்கம், செல்வச் செழிப்பு ஆகியவற்றால் எழும் தோஷங்களைப் பற்றி எச்சரிப்பதன் மூலம் ராஜ்ஜியத்தின் பல அபாயங்களையும் எடுத்துரைத்து, அதனால் ஏற்படும் கஷ்டங்களையும் விளக்கி, அதிலிருந்து எவ்வாறு தன்னை காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதையும் உபதேசிக்கிறார்.

**एवं समतिक्रामत्सु केषुचिद् दिवसेषु राजा चन्द्रापीडस्य यौवराज्याभिषेकं चिकीर्षुः प्रतीहारान् उपकरणसम्भारसङ्ग्रहार्थम् आदिदेश ।**

சில நாட்களுக்குப் பிறகு, அரசன் (தாராபீடன்) சந்திராபீடனுக்கு இளவரசுப் பட்டமளிக்க விரும்பினார். பணியாட்களை அழைத்து, அதற்கு வேண்டும் பண்டங்களைக் கொண்டு சேர்ப்பதற்கு கட்டளையிட்டான்.

**समुपस्थितयौवराज्याभिषेकं च तं कदाचिद् दर्शनार्थम् आगतम् आरूढविनयमपि विनीततरम् इच्छन् कर्तुं शुकनासः सविस्तरम् उवाच ।**

இளவரசுப்பட்டம் பெறப்போகிற சந்திராபீடன், ஒரு சமயம் சுகநாஸரை தரிசிப்பதற்காக சென்றான். ஏற்கனவே வினயம் வாய்ந்தவனாயிருப்பினும் அவனை இன்னும்

விசேஷமாய் வினீதனாக்க வேண்டுமென்று எண்ணி சுகநாஸர் பின் வருமாறு சற்று விரிவாக உபதேசிக்கத் தொடங்கினார்.

**तात चन्द्रापीड! विदितवेदितव्यस्य अधीतसर्वशास्त्रस्य ते नाल्पमपि उपदेष्टव्यम् अस्ति । केवलं च निसर्गतः एव अभानुभेद्यम् अरत्नालोकोच्छेद्यम् अप्रदीपप्रभापनेयम् अतिगहनं तमः यौवनप्रभवम् । अपरिणामोपशमः दारुणः लक्ष्मीमदः ।**

''அப்பா! சந்திராபீட! அறியவேண்டியவை அனைத்தையும் அறிந்து, கல்விகளையெல்லாம் கற்ற உனக்கு உபதேசிக்கவேண்டிய விஷயம் சிறிதுமில்லை. என்றாலும், யௌவனப் பருவத்திலுண்டாகும் இருளோ (அஞ்ஞானம்) மிகவும் அடர்த்தியானது - இயற்கையாகவே சூரியனால் விலக்க முடியாததும், ரத்தினங்களின் காந்தியால் விலக்க முடியாததும், பெருந் தீபங்களின் ஒளிகளாலும் விலக்க முடியாதது. காலத்தின் பரிமாணத்தால் அடங்காதிருக்கும் செல்வத்தின் அகங்காரம் (இறுமாப்பு) மிகக் கொடுமையானது.''

**कष्टम् अनञ्जनवर्तिसाध्यम् अपरमब ऐश्वर्यतिमिरान्धत्वम् ।**
**अशिशिरोपचारहार्यः अत्यन्ततीव्रः दर्पदाहज्वरोष्मा ।**
**सततमब अमूलमन्त्रगम्यः विषमः विषयविषास्वादमोहः ।**
**नित्यम् अस्नानशौचबाध्यः बलवान् रागमलावलेपः ।**
**अजस्रम् अक्षपावसानप्रबोधा घोरा च राज्यसुखसंनिपातनिद्रा भवति इत्यतः विस्तरेण अभिधीयसे ।**

செல்வத்தின் இருளால் ஏற்படும் குருட்டுத்தன்மை எவ்வித மைக் குச்சியாலும் தீர்க்க முடியாது என்பது மற்றொரு துன்பமாகும். (மை இடுவது கண்ணின் தெளிவிற்கு என்பது ஆயுர்வேதத்தில் பிரசித்தம்.). குளுமை உபசாரங்களால் போக்க முடியாத மிகக் கொடுமையான உஷ்ணம் கர்வம் எனும் காய்ச்சல். எந்த மந்திரத்தினாலும் போக்க முடியாதது, போக விஷயங்கள் எனும் விஷத்தைச் சுவைப்பதால் உண்டாகும் மோகம். மற்றொரு துன்பமாகுமெனக் கருதியே உந்தனுக்கு விரிவாகக் கூறுகின்றேன்.

(தொடரும்)

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 26

## ஸ்ரீ ஆனந்தானுபவர்

ஸ்ரீ வ்யாஸ பகவான் வேதாந்த ஸூத்ரங்களை பிரகடனப்படுத்தும்போது ஆரம்பத்திலேயே பிரம்ம ஞானமே பந்த நிவர்த்திக்கும் காரணம் என்று தெளிவாக எடுத்துரைத்தார். இக்கருத்தைத் தனது அத்யாஸ பாஷ்யத்தில் மெருகூட்டி வளப்படுத்தினார். பந்தம் என்பதே ஒரு பொய்த் தோற்றமென்றார். த்வைதிகளும், நாநாஜீவவாதிகளும், பூர்வ மீமாம்ஸகர்களும் இக்கருத்தைக் கடுமையாக எதிர்த்தனர். ஸ்ரீ சங்கரருக்குப் பின் வந்த அத்வைத ஆசார்ய பரம்பரையினர் பலர் இவரது வாதங்களை முறியடித்து ஸ்ரீ சாங்கர வேதாந்தத்தின் ஸத்யத் தன்மையை நிலைநாட்டினர். இந்த பரம்பரையில் வந்தவர்களுள் ஆனந்த போதருக்குத் தனிப் பெருமையும் தனி இடமும் உண்டு.

ஸ்ரீ சாங்கர வேதாந்தத்திற்கு மாறுபட்ட கருத்துக்களை எழுப்பியவர்களைக் கண்டிக்க எழுந்த நூல்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஆழ்ந்த விசாரம், தீர்க்கமான ஆணித்தரமான வாதங்கள், பிரமாணங்களின் வரிசை இவற்றோடு கூடியதாக எளிமையான விளக்கங்கள், இனிமையான லலிதமான பாஷா லாகவம் இவற்றோடு கூட இருந்தன முதல்வகை நூல்கள். இரண்டவது வகை நூல்கள் தர்க்கத்தை நவ்யந்யாய ரீதியில் புதிதாகக் கையாண்டனர். கங்கேஸபட்டர் காலம் துவங்கி இந்த முறை கையாளப்பட்டது எனலாம்.

ஸ்ரீ மதுஸூதன ஸரஸ்வதி துவங்கி ஸ்ரீ ப்ரஹ்மானந்த ஸரஸ்வதி முடிய வந்த ஆசார்யர்கள் அனைவரும் புதிய யுக்தியைக் கையாண்டனர். சிறந்த பாஷா ஞானத்துடன் விஞ்ஞான ரீதியில் மறுக்க இயலாத தர்க்க வாதங்களை முன் நிறுத்தி கண்டித்தனர். இவ்விருவகை ஆசார்யர்களில் ஆனந்த போதர் முதற் பிரிவைச் சேர்ந்தவர். இவரது நூல்களில் அலங்காரம் இருக்காது. ஆழ்ந்த சிந்தனை இருக்கும். ஆர்ப்பாட்டம் இருக்காது. எளிமை இருக்கும். தெளிவு இருக்கும். குழப்பம் இருக்காது. வாதம் இருக்கும். பேதம் இருக்காது. திருத்தமான கருத்துக்கள் அழுத்தமாக இருக்கும். வார்த்தைகளின் கோர்வை, வாக்யங்கள் அமைப்பு, அர்த்த புஷ்டி இவை வாசகர்களைக் கவர்வதில் வியப்பில்லை.

ஆனந்த போதரின் ஆழ்ந்த கருத்தின் மேல் எழுந்த வாதங்களும், தேர்ந்த ஞானமும் போற்றுதற்குரியன. இஷ்டஸித்தி இயற்றிய விமுக்தாத்மரின் சீடர் ஆனந்த போதர்

என்று சிலர் கருதுகின்றர். பிரகாசாத்மரின் ஸப்த நிர்ணயம் என்ற நூலுக்கு இவர் உரை எழுதியுள்ளார். இதில் ஒரு சுலோகத்தில் குருவை நமஸ்கரிக்கிறார். **'நமோ... ஆத்மவாஸாபி'தாநாய குரவே' குணவேஸ்மநே'** என்று சொல்கிறார். இவரது மற்ற எந்த நூல்களிலும் குரு வந்தனம் காணப்படவில்லை. இதன் மூலம் இவர் **'ஆத்மவாஸர்'** என்பவரின் சீடராக இருக்கலாம் என்று சிலர் கருதுகின்றனர். விமுக்தாத்மரின் 'இஷ்டஸித்தி' நூலுக்கு உரை எழுதும் காலத்து **'ஏததேவ உக்தம்' குருபி :** என்கிறார். எனவே **'விமுக்தாத்மர்'** இவருக்கு வித்யா குருவாகவும், **'ஆத்மவாஸர்'** தீக்ஷா குருவாகவும் இருந்திருக்கலாம் என அறியப்படுகிறது.

ந்யாய தீபாவலி, நியாய மகரந்தம், ப்ரமாணமாலா, ஸப்த நிர்ணய வ்யாக்யானம் போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். நையாயிகர்களின் வாதங்களை தகர்க்கும் பொருட்டு எழுதப்பட்டதே நியாய மகரந்தம். நையாயிகர்கள் மட்டுமின்றி ஸாங்க்யர்கள், பௌத்தர்கள், வைசேஷிகர்கள், பூர்வமீமாம்ஸாவாதிகள், ஞானகர்ம ஸமுச்சயவாதிகள் போன்றவர்களின் கருத்துக்களில் காணப்படும் ஒவ்வாமைகளை எடுத்துக்காட்டி கண்டிப்பது இவரது ஞானத்திற்கும் வாதத் திறமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. வாசஸ்பதி மிஸ்ரரை பல நூல்களில் பற்பல இடங்களில் எடுத்துக்காட்டுகிறார்.

மதுஸூதன ஸரஸ்வதி பல இடங்களில் ஆனந்த போதரின் நூல்களைக் கையாள்கிறார் என்பது இவரது நூல்களுக்குப் பெருமை சேர்க்கிறது. சித்ஸுகாசார்யர் இவரது ப்ரமாணமாலா, நியாய மகரந்தம் ஆகிய இரு நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். சித்ஸுகரின் சீடரான ஸ்ரீ ஸுகப்ரகாஸர் என்பவர் ப்ரமாண மாலாவிற்குத் தனியாக ஒரு உரை எழுதியுள்ளார். ஸுகப்ரகாஸரும் அம்ருதானந்த யோகி என்பவரும் 'ந்யாய தீபாவலி'க்கு தனித்தனியே உரை எழுதியுள்ளனர்.

கி.பி 11- ஆவது நூற்றாண்டில் வாழ்ந்த விவரண நூல் எழுதிய பிரகாஸாத்மரின் கருத்துக்களை 'ஆனந்தபோதர்' தனது 'ந்யாய மகரந்த'த்தில் எடுத்தாள்கிறார். கி.பி 12-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியிலும் கி.பி 13-ஆவது நூற்றாண்டின் முன்பகுதியிலும் வாழ்ந்த அனுபூதிஸ்வரூபர் ஆனந்தபோதரின் எல்லா நூல்களுக்கும் உரை எழுதியுள்ளார். எனவே ஆனந்தபோதர் கி.பி 11-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், 12-ஆவது நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்திருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் உள்ள வேற்றுமையின்மையை விஞ்ஞானமுறையில் பல பிரமாணங்களின் ஆதாரத்தில் நிரூபிக்கிறார். ஐடபரஸ்பர பேதத்தையும் நிராகரிக்கிறார். அநிர்வசநீயக்யாதி பற்றி விரிவாக விவரிக்கிறார். காணும்

பிரபஞ்சத்திற்கு இருப்பு அஞ்ஞான நிலையில் மட்டும் தான் என நிரூபிக்கிறார். ஆத்மா ஸ்வபிரகாசமானது, தனது இருப்பை வெளிப்படுத்த மற்றொன்றைச் சாராதது என்கிறார். கேவல அறிவு வடிவாயிருப்பதே ஆத்மாவின் வடிவம், அவித்யையே பலவாறாகத் தோன்றுவதற்குத் காரணம், ஞானம் ஒன்றினாலேயே முக்தி போன்றவற்றை சிறப்பாக நிர்ணயிக்கும் பாங்கு இவருக்கே உரியது.

துக்க நீக்கமும் சுக பிராப்தியுமே முக்தியாகும். அவித்யா நீக்கமே இந்நிலை தரும். ஆத்ம தத்துவம் இரண்டற்றது. சுகவாரியானது. துக்கக்கலப்பற்றது. ஆனால் அவித்யையினால் ஜீவாத்ம பரமாத்ம தத்துவம் வேறுபட்டது போலும், துக்க ஸம்பந்தமுடையது போலும் காணப்படுகிறது. இதுவே பிறவிக்குக் காரணமாகிறது. சரீரேந்திரியங்களிலும், அவை சார்ந்தவற்றிலும் நான், என்னுடையது என்ற எண்ணம் எழக் காரணமாயிருப்பது அவித்யை.

சூரிய ஒளியின் முன் எவ்வாறு இருட்டு இருக்க முடியாதோ, அதுபோல் எப்போதும் பிரகாசமாயிருக்கும் ஆத்ம தத்துவத்தின் முன் அவித்யை அல்லது அஞ்ஞானமாகிற இருட்டு எவ்வாறு இருக்கமுடியும்? இருக்கிறதே என்கிறார் ஆசிரியர். எனக்குத் தெரியவில்லை என்கிற அஞ்ஞானம் ஒவ்வொரு உயிரினிடத்திலும் இருப்பதை யாரும் மறுக்க முடியாது தானே ! அறியவில்லை, நான் அறியாமலிருக்கிறேன் என்பதை அறிவித்துக் கொண்டு இருக்கும் ஆத்ம தத்துவம் அறிவு வடிவாகவே இருப்பதால், அவித்யைக்கு ஆத்மாவே ஆதாரமாக இருக்கிறது இருக்கிறது எனலாம். அவித்யையினால் எழும் அவித்யையினாலேயே ஜீவனென்றும், ஈச்வரனென்றும், ப்ரஹ்மம் என்றும் வேறுபட்டுத் தோன்றுகிறது. அவித்'யை ஜீவனைச் சார்ந்திருக்கிறதா, ஈஸ்வரனை சார்ந்திருக்கிறதா அல்லது ப்ரஹ்மத்தை சார்ந்திருக்கிறதா என்ற கேள்விக்கே இடமில்லை. காணும் ஸ்தூல பிரபஞ்சம் மாயையின் காரியம் என்றால் கிளிஞ்சலில் காணப்படும் வெள்ளி போல் இது பொய்யாகத் தானே இருக்க வேண்டும் ?

சாஸ்திர ஞானம் கூட பொய்யாகத் தானே இருக்க வேண்டும். இந்த வாதம் தவறு என்கிறார். காணப்படும் உலகம் ப்ரஹ்மம் போல் எக்காலத்தும் ஸத்யமில்லை. முயற்கொம்பு போல் பொய்யுமில்லை. அஞ்ஞானம் இருக்கும் வரையில் நிஜம் போல் தோன்றும் பொய் இதன் நிவர்த்தியில் பொய்யாகத் தோன்றும் நிஜம். த்வைத ஸித்தாந்தப் பிரவர்த்தகரான 'வ்யாஸ தீர்த்தர்' தனது 'ந்யாயாம்ருதத்தில் ஆனந்தபோதரின் வாதங்களை மறுத்துள்ளார். மதுஸூதன ஸரஸ்வதி தக்க முறையில் தனது 'அத்வைத ஸித்தி' என்ற நூலில் மறுத்துள்ளார். ஸ்ரீ ஆனந்தபோதர், ஆனந்த போத'பட்டாரகர் என்று அழைக்கப்பட்டார். இவரது வாழ்க்கை பற்றிய முழு விவரங்கள் கிடைக்கவில்லை.

இவரைத் தொடர்ந்து அத்வைத ஆசார்ய பரம்பரையில் வருபவர் **ஸ்ரீ சித்ஸுகாசார்யர்.**

# சீதா கல்யாணம்

**''சீதா கல்யாண வைபோகமே''** என்று ஒவ்வொரு வீட்டின் கல்யாணத்திலும் பாடுவது வழக்கம். சீதாதேவி சாக்ஷாத் மஹாலக்ஷ்மியினுடைய ஸ்வரூபம். சீதை நம்மைப் போல் கர்ப்பத்திலிருந்து பிறக்கவில்லை. ஸ்ரீதேவி, பூதேவி மஹாவிஷ்ணுவின் இரு சக்திகள்; மஹா விஷ்ணுவின் இருதயத்திலேயே ஸ்ரீதேவி எப்போதும் குடிகொண்டிருப்பதாக புராணங்கள் கூறும். சமுத்திரத்திலிருந்து கடையும் போது ஸ்ரீதேவி வெளிவந்ததாகக் கூறப்படுவாள். பூமி தேவியினிடத்தில் தான் வராஹ அவதாரத்தில் நரகாசுரன் பிறந்தான்.

ஸ்ரீதேவிக்கும், பூமாதேவிக்கும் ஒரு விஷயத்தில் மிகவும் பொருத்தம். ஸ்ரீதேவி சமுத்திரத்தில் தோன்றினதாகச் சொல்லப்படுகிறது. பூமாதேவி பூமிக்கு அதிர்ஷ்டான தேவதையாக பூமியிலிருந்தே வந்ததாகச் சொல்வார்கள். சமுத்திர ஜலம் பூமியின் மேலும், கீழும் இருக்கின்றது. ஆகவே சமுத்திரத்திலிருந்து உண்டானவள் என்றால் பூமியிலிருந்து உண்டானவள் என்று கொள்ள வேண்டும். அதற்கேற்றாற்போல் சீதா தேவி பூமியிலிருந்துதான் வந்தாள். பிறகு கடைசியில் பூமியைப் பிளந்து கொண்டு அதில் அடைக்கலம் புகுந்து கொள்கிறாள். இவ்விரண்டையும் பார்க்கும் போது சீதாதேவியும், பூமாதேவியும் ஒரே அம்சம் கொண்டவர்கள் எனக் கருதப்படுகிறது.

தசரத மஹாராஜாவிற்கு வெகு காலம் பிள்ளை இல்லாமல் யாகம் செய்து, பின் பாயச வடிவில் பகவான் மஹா விஷ்ணு வந்து, தசரதனுக்கு மகனாகப் பிறந்தார். ஜனக மஹாராஜா சிறந்த ஞானியாக விளங்கி புத்ர சம்பத்தில் அபேக்ஷையில்லாமல் வாழ்ந்தவருக்கு, பூமியிலிருந்து தேவியின் அம்சமாக சீதாதேவி கிடைத்தாள். இப்படி தேவதைகளின் நன்மைக்காகவும், உலகத்தில் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும் அயோத்தியிலும், மிதிலையிலும் அவதரித்த ராமனுக்கும், சீதைக்கும் மனித வாழ்க்கை முறைப்படி மனிதர்கள் வாழ வேண்டிய வழி முறைகளை தெரிவிப்பதற்காகவே அவதாரம் எடுத்துக் கல்யாணம் முறைப்படி நடைபெறுகிறது.

இந்து சமயத்தில் கல்யாணம் அக்னிசாக்ஷியாக நடைபெற வேண்டும். ஏழு அடிகள் சேர்ந்து நடந்து கருங் கல்லின் மேல் கால் வைக்க வேண்டும். மாலையில் சப்தரிஷி மண்டலத்தில் அருந்ததி தரிசனம். கையோடு கை பிடித்துக் கொண்டு இந்தப் பணிகளைச் செய்ய வேண்டும். இதை வைத்துத்தான் பாணிக்ரஹணம் என்று பெயர்

வந்தது. (பாணி - கை; க்ரஹணம் - பிடிப்பது) இதுவரை தனி மனிதனாக பிரம்மச்சாரியாக இருந்த ஒருவன், சாப்பாட்டிலே கூட பொறுப்பில்லாமல் இருக்கக்கூடிய நிலையில் இருந்தான். பிரம்மச்சர்ய நிலையில் இருக்கும் வரை மற்றவர்கள் வீடுகளில் அவனுக்குக் கிடைத்த உணவைச் சாப்பிட வேண்டும் என்ற நியதி. அவன் ருசியையோ, இடத்தையோ. காலத்தையோ பார்த்துச் சாப்பிட வேண்டும் என்று சொல்லவில்லை. அப்படி இருந்தவனுக்கு பாணிக்ரஹணம் என்ற மங்களகரமான கல்யாணம் ஏற்பட்ட பிறகு விசேஷமாக ஒரு பொறுப்பு வருகிறது. இதை வைத்துத்தான் கல்யாணத்திற்கு விவாஹம் என்று பெயர் ஏற்பட்டது. **'விசேஷேண வாஹயதி இதி விவாஹ:'** அதாவது பொறுப்பற்று இருந்த இருவரையும், கல்யாணம் பொறுப்புள்ளவர்களாக செய்விக்கிறது.

பொறுப்புடன் வாழ்க்கை நடந்தால்தான் உலக இயல்பே சரியாக நடைபெறும். பொறுப்பில்லாத வாழ்க்கை அமைதியில்லாத வாழ்க்கை. ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் வாழ்க்கை அமைதியுள்ள வாழ்க்கை. ஒருவருக்கொருவர் விடாப்பிடியாக தன்னுடைய பலஹீனத்தையோ, பலத்தையோ காண்பிப்பது, அமைதியற்ற நிலையை உருவாக்குகிறது. ஒரு மனிதனுடைய உடல், அதன் நிழல் இரண்டும் வெவ்வேறாக பார்வைக்குத் தோன்றினாலும், உடலில்லாமல் நிழலில்லை; நிழலில்லாமல் உடலில்லை. சில சமயம், குறைந்தும் இருக்கும். அது போல் வாழ்க்கையில் கொஞ்சம் ஏற்றத் தாழ்வு இருக்கும். மனத்தினால் அவைகளை ஆலோசித்து செயல்பட வேண்டும்.

'உடலுடைய நிலை ஒரே மாதிரிதான் உள்ளது. சூரியனின் ஒளியினால் ஏற்றத் தாழ்வு ஏற்படுகிறது. அது வெறும் தோற்றமே தவிர, நிஜமல்ல'' என்று நாம் எப்படி புரிந்து கொள்ள வேண்டுமோ அது போல் வாழ்க்கையில் சிறிய ஏற்றத் தாழ்வுகள் வந்தாலும் அவைகள் உள்ளத்தின் மூலம் வராமல் ஏதோ சிறு சலனத்தின் மூலம் வந்தது என்று அறிந்து, அந்தச் சலனத்தை அகற்றிக் கொண்டு இரு உடல், ஒரு மனதாக வாழ்க்கை நடத்த வேண்டும். இந்தக் காலத்திலே உடல் என்ன நிறமாக இருந்தாலும் தன்னுடைய உடலை அலங்கரிப்பதில் மேட்சிங் (Matching) வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரே விதமான கலரில் பொட்டு முதல் செருப்பு வரை அணிந்து கொள்வதை நாம் பார்க்கிறோம். இது வெளி Matching அது போல் இரண்டு உடலின் நிறம், உடல் அலங்காரப் பொருள்கள் எப்படி இருந்தாலும் Matching ஆக அல்லது Matching அல்லாமல் இருந்தாலும், மனதில் இருவருடைய உள்ளத்தில் ஒரே சிந்தனை, ஒரே

எண்ணம், ஒரே செயல் இவையெல்லாம் இருந்து விட்டால் இதுதான் அமைதியுள்ள பாதையில் நமது வாழ்க்கையை எடுத்துச் செல்ல ஒரே மேட்சிங்.


இதைத்தான் சீதாதேவி தன் வாழ்நாளில் ராமருடன் கல்யாணம் ஆனது முதல் அரண்மனையில் வாழ்க்கை நடந்தாலும், காட்டில் வாழ்க்கை நடந்தாலும் இரண்டையும் சமமாகப் பாவித்து கணவனைப் பிரியாமல் ஒருமனதாக வாழ்க்கை நடத்த வேண்டுமென்பதை எடுத்துக் காட்டினாள். இதை வைத்துத்தான், **''சீதா கல்யாண வைபோகமே''** என்று பாடினார்கள்.

(தொடரும்)


## ''ஸ்ம்ருதி முக்தாபலம்'' என்னும் வைத்தியநாத தீக்ஷிதீயம்

*அரிய தர்மசாஸ்திர புத்தகத் தொகுப்பு எளிய தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டுள்ளது.*

1. வர்ணாஸ்ரம தர்மகாண்டம், 2. ஆஹ்னிககாண்டம் பூர்வபாகம், 3. ஆஹ்னிக காண்டம் உத்தரபாகம், 4. ஆசௌச காண்டம், 5. ஸ்ராத்தகாண்டம் பூர்வபாகம், 6. ஸ்ராத்த காண்டம் உத்தரபாகம், 7. திதிநிர்ணயகாண்டமும் ப்ராயச்சித்த காண்டமும் என்ற 7 பாகங்கள் சேர்த்து மிகக்குறைந்த விலையில் கிடைக்கப் பெறுகின்றது. ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் வாங்கி பயன் பெறலாம்.



ஏழு தொகுதிகள் அடங்கிய ஒரு செட் விலை 2500

கூரியர், தபாலில் பெற மேலும் 500 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்

9600543996, 7904244054, 9003845456, 9710765203

**குறிப்பு :**

**இந்தத் தொகுப்பு ஸ்ரீ மடம் புக் ஸ்டால் மற்றும் ஸ்ரீ பெரியவாள் முகாமிலும் கிடைக்கும்**

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி

**விஸ்வனாத சாஸ்த்ரி - குர்ஜாடா**

மகாகவி ஏமாந்து போனார்



பெரியவா விஜயவாடாவில் முகாமிட்டிருந்தார். நகரத்தினர் விழா ஒன்று ஏற்படுத்தியிருந்தனர். வாத்ய கோஷங்களுடனும் வாண வேடிக்கைகளுடனும் பெரிய ஊர்வலம் நடத்தினர். பல்லக்கில் ஸ்வாமிகள் ஊர்வலம் வந்ததைக் கண்ட ஊர் ஜனங்கள் மகிழ்ச்சி அடைந்தனர். விஜயவாடாவில் இருந்த கவிஸாம்ராட் விஸ்வனாத ஸாஸ்த்ரி என்பவர் ஸ்வாமிகளை தர்சிக்க முகாமுக்குச் சென்றார்.

முன் தினம் நடந்த ஆடம்பரமான ஊர்வலத்தைப் பற்றிக் கேள்வி பட்டிருந்ததால் பெரியவா ஸிம்மானத்தில் அமர்ந்திருப்பார் என்ற எண்ணத்துடன் வந்தார். அங்கு அவர் கண்ட காக்ஷி ப்ரம்மிக்க வைத்தது. பெரியவா கௌபீனம் அணிந்து கையில் தண்டத்துடன் தரையில் படுத்துக் கொண்டிருந்ததைப் பார்த்து ஏமாற்றம் அடைந்தார்.

பெரியவாளைப் பற்றி பல பாடல்களை இயற்றினார்.

1978 ஆம் வருடம் பெரும் புயலால் ஆந்த்ரா சேதமடைந்திருந்தது. கரையோர பகுதிகள் நாசமடைந்தன. மக்கள் பலர் மாண்டனர். ஸ்ரீ சரணர்கள் மிகவும் வேதனை அடைந்தார். வேத சப்தம் நிலவினால் அகால மரணமடைந்தவர்களின் ஆத்மா சாந்தியடையும் என்று எண்ணினார். அவனிகட்டா என்னுமிடத்தில் ஸ்ரீ சிட்டி கனபாடிகள் இருந்தார். அவரை அழைத்து வந்து உடனே ஒரு வேத பாடசாலை அமைத்து அதில் மாணவர்களைச் சேர்க்க வைத்து அவர்களுக்கு போஜன வசதி ஏற்படுத்த செய்யச் சொன்னார். கனபாடிகளும் அவரது ஆணையை மதித்து மாணவர்களைத் தேடிக் கண்டுபிடித்து வேத பாடசாலையை ஆரம்பித்தார்.

இதை அறிந்த பலர் அவருக்கு உபகாரம் செய்தனர். பல காலமாக அவர் பாடசாலையை நடத்தி வருகிறார். அவருக்கு 12 பெண்கள். வேதாத்யயனம் செய்த மாணவர்களுக்கே கல்யாணம் செய்து வைத்தார். அந்த குடும்பம் இன்றும் தழைத்து ஓங்குகிறது. கனபாடிகளின் மகன் இன்று பாடசாலையை நடத்தி வருகிறார்.

வேத ரக்ஷகர் பெரியவா புகழ் வாழ்க!

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து**
**மறைமொழி காட்டி விடும்**

இம்மண்ணுலகில் உள்ள சாஸ்த்ரங்கள் (மக்களின் நல்வாழ்வுக்குரிய அறத்தைக் கூறும் அறிவு நூல்கள்) உள்ளத்தின் தூய நிறைவில் இருந்து தோன்றுகின்ற சொற்களை உடைய சீரிய சிந்தனையாளர்களாகிய மக்களின் (துறவிகளின்) சிறப்பினை உணர்த்தியே தீரும்.

(குறள் : 28)

உண்மையை உள்ளவாறு அறிந்து உலகத்திற்கு உணர்த்திய நிறைவான வாழ்வியலை வழங்கிய முன்னோர்களுக்கு நமது பணிவான வணக்கங்கள்.

(ரிக்வேதம் : 10 - 14-15)

எத்தனையோ மஹான்கள் அனைவருக்கும் வணக்கம்.

(ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள்)

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 14. லட்சிய தம்பதிகள்

ஒரு ஆணுக்கும் பெண்ணிற்கும் அக்னி சாட்சியாக, பெரியோர்கள் முன்னிலையில் நடைபெறும் புனிதமான நிகழ்ச்சியே விவாகம். விவாகமான இருவரும் கணவன் மனைவியாகி அன்னியோன்யமாகி வாழ்க்கை முழுவதும் சுக துக்கங்களில் பங்கேற்று வாழ வேண்டும். எந்த சூழ்நிலையிலும் இவர்களுக்குள் பிரிவு நேரக்கூடாது. இதுவே நம் ஆதர்ச (இலட்சிய) பாரத சம்பிரதாயம்.

**'தர்மே ச, அர்த்தே ச காமே ச நாதிசராமி',** ஒருநாளும் நான் என் பத்னியை விட்டு விட்டு, தர்மம், அர்த்தம், காமத்தை அனுஷ்டானம் செய்ய மாட்டேன் என்று அக்னிசாட்சியாக சத்தியம் செய்த பிறகு, பதியை பத்னியோ, பத்னியை பதியோ விலக்கக் கூடாது. பதி பத்னியின் சம்பந்தம் வெறும் காம போகங்களுக்காக அல்ல. நல்ல சந்ததிகளை உருவாக்கி தன் வம்சத்திற்கும், சமுதாயத்திற்கும் சேவை செய்ய வேண்டும் என்பதற்காகவேயாகும்.

கணவன் மனைவி எப்பொழுதும் அன்புடனும், ஒற்றுமையுடனும் வாழ்க்கை நடத்த வேண்டும். இவர்களுக்குள் யார் பெரியவர் யார் சிறியவர் என்ற பாவனை வரக்கூடாது. இரண்டு சக்கரங்கள் உள்ள வண்டிக்கு இரண்டும் முக்கியம் தான். ஒரு சைக்கிளுக்கு முன் சக்கரம் முக்கியமா ? பின் சக்கரம் முக்கியமா ? இரண்டும் முக்கியமல்லவா?

வாழ்க்கையில் சுக துக்கம் ஏற்படுவது சகஜம். இதை மனதில் வைத்துக் கொண்டு வெறுப்பையும், விரோதத்தையும் வளர்த்துக் கொள்வது தவறு. சுக துக்கங்கள் காற்றைப்போல் வந்து போய் கொண்டிருக்கின்றன. ஆனால் கணவன் மனைவியரிடம் அன்பு, அன்னியோன்யம், முதலியவை நிரந்தரமாக இருக்க வேண்டும்.

பொன் மானுக்கு ஆசைப்பட்டதால் சீதை தானும் கஷ்டத்தை அனுபவித்து, ஸ்ரீராமனுக்கும் துக்கத்தைக் கொடுத்தாள். ஸ்ரீராமன் தந்தையின் வார்த்தைக்குக் கீழ்படிந்து தானும் காட்டிற்குச் சென்று மனைவியான சீதைக்கும் துக்கத்தைக் கொடுத்தான். ஆனாலும் அவர்கள் இருவரும் எவ்வளவு அன்புடன் வாழ்ந்தார்கள். இவர்கள் அல்லவா இலட்சிய தம்பதிகள். இன்றும் தம்பதியர்கள் இலட்சிய வாழ்க்கையை கடைபிடித்து ஆனந்தமாக வாழலாம்.

# மூக ஸாரம்

## இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த **ஸ்ரீ மூக கவியி**னால் இயற்றப்பட்ட **மூக பஞ்சசதியை** எல்லாரும் அறிவர்.
காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது **மூக பஞ்சசதி.**
அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை **'மூக ஸாரம்'** என்னும் தலைப்பில் மறைந்த **ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன்** தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாராயணம் செய்வோம்.

**जाता शीतलशैलत: सुकृतिनां दृश्या परं देहिनां**
**लोकानां क्षणमात्रसंस्मरणत: संतापविच्छेदिनी।**
**आश्चर्यं बहुखेलनं वितनुते नैश्चल्यमाबिभ्रती**
**कम्पायास्तटसीम्नि कापि तटिनी कारुण्य पाथोमयी ॥ १२ ॥**

ஜாதா சீதலசைலத: ஸுக்ருதிநாம் த்ருஶ்யா பரம் தேஹிநாம்
லோகாநாம் க்ஷணமாத்ர ஸம்ஸ்மரணத: ஸந்தாப விச்சேதிநீ ।
ஆஶ்சர்யம் பஹுகேலநம் விதநுதே நைஶ்சல்யமா பப்ரதீ
கம்பாயாஸ்தடஸீம்நி காப தடிநீ காருண்ய பாதோமயீ ॥ 12 ॥

*காமாக்ஷி தேவியை நதிக்கு ஒப்பிட்டு வர்ணிக்கப்படுகிறது. இந்த நதியானது ஹிமவத் பர்வதத்தில் உண்டாகிறது. புண்யசாலிகளுக்கே இது தென்படும். த்யானித்த மாத்திரத்திலேயே தாபத்தைப் போக்கும், கருணையென்ற ஜலத்தால் நிறம்பியது. இது அசைவற்றிருந்தும் அநேகவித லீலைகளைச் செய்வது ஆச்சரியமாகிறது.*